REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூலை 12 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 163 | Wednesday 12, July, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## A/L பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

நவ. 27 முதல் டிசம். 21 வரை இடம்பெறும்

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 21ம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த 06

8 நாடுகளை சேர்ந்த சுமார் 300 வர்த்தகர்களுக்கு வாராவாரம் ஆசீர்வாதம்

# ஒரு வாரத்தில் ரூ.1.5 மில் சம்பாதித்த போதகர்



ஜெரோம் பெர்னாண்டோ குறித்து CID விசாரணையில் அதிர்ச்சித் தகவல்

லோரன்ஸ் செல்வநாயகம்

சர்ச்சைக்குரிய நபரான போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இலங்கை உட்பட 8 நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 வர்த்தகர்களுக்கு வாரம் ஒரு தடவை ஒன்லைன்மூலம் வர்த்தக ஆலோசனை மற்றும் தேவ ஆசீர்வாதம் வழங்கி அந்த சொற்பொழிவின் மூலம் மாத்திரம் ஜெரோம் பெர்னாண்டோ 1.5 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக சம்பாதித்ததாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**ஒன்லைன் மூலமாக நடத்தும் சொற்பொழிவு வாரத்திற்கு 210 டொலர்கள் மூலம் பெற்றே சுமார் 300 பேரை இணைத்துக் கொள்வதாகவும் தெரியவந்துள்ளது**

அந்தத் திணைக்களத்தின், சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு அது தொடர்பில் தகவல்களை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் மேற்படி சொற்பொழிவு ஒன்லைன் மூலமாக நடத்தப்படுவதுடன் அந்த சொற்பொழிவில் பங்குபற்றும் சர்வதேச ரீதியிலான வர்த்தகர்கள் 210 டொலர்களைச் செலுத்தியே அந்த நிகழ்வில் பங்கேற்பதாகவும் அதற்கான பணத்தை அவர்கள் இலங்கையிலுள்ள வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்த சொற்பொழிவின் மூலம் மாத்திரம் ஜெரோம் பெர்னாண்டோ 1.5 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக சம்பாதிப்பதாகவும் 06

## ஜனாதிபதி ரணிலை சந்தித்துரையாடிய இந்திய வெளிவிவகார செயலாளர்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று (11) பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொண்டு, இரு நாட்டு மக்களுக்கும் பலனளிக்கும் வகையில் சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பிலும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு 06

03 இ.போ.ச. தொலைதூர சேவை நேர அட்டவணை விபரங்கள் இணையத்தில்
அமைச்சர் பந்துல குணவர்தனவினால் ஆரம்பிப்பு

## அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தினால் ரூ.5 இலட்சம் அபராதம்

ரூ. பத்தாயிரம் 05 இலட்சமாக அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் நபர்களுக்கெதிராக தற்போது நடைமுறையிலுள்ள 10,000 ரூபா தண்டப்பணத்தை 5,00,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் 06

## அடுத்த வருடத்திற்கான "அஸ்வெசும" ஆகஸ்ட 01 முதல் விண்ணப்பங்கள்

– சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல்



நலன்புரி அரசிலிருந்து தொழில் முனைவோர் அரசை நோக்கி இலங்கையைக் கொண்டு செல்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் என்றும் அடுத்த வருடத்திற்கான "அஸ்வெசும" வேலைத்திட்டத்துக்கு ஆகஸ்ட் 01 முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

"அஸ்வெசும" வேலைத்திட்டத்தின் இறுதி இலக்கு 06

## கடம்ப மரம் அகற்றப்பட்டது அமைச்சரவை அனுமதியுடனாகும்

ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

கடம்ப மரம் அகற்றப்பட்டது அமைச்சரவை அனுமதியுடனாகும் என போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மத்திய அதிவேக பாதை திட்டத்திற்கு தடையாக இருந்த கடம்ப மரத்தை வெட்டி அகற்றியது தொடர்பாக நேற்று (11) நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்திகள் தொடர்பான கலந்துரையாடலில் இவ் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

அரசியல் மற்றும் வேறு காரணங்களினால் "இது 06

ஈஸ்டர் தாக்குதல் சம்பவ 100 மில். ரூபா நட்டஈடு

## முன்னாள் ஜனாதிபதியினால் இதுவரை 15 மில். ரூபா வழங்கல்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், இதுவரை 15 மில்லியன் ரூபாயை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் என 06

திருத்தம் பெறும் புதிய கடற்றொழில் சட்டம்;

## கடற்றொழில் சங்கங்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு



திருத்தப்படவுள்ள புதிய கடற்றொழில் சட்டங்கள் தொடர்பில் கடற்றொழில் சங்கங்கள் கலந்துரையாடவிரும்பினால் அமைச்சில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படுவதோடு அவர்களின் கருத்துகளும் உள்வாங்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் 06

## EPF வட்டி வீதத்தில் எந்தவித குறைப்பும் மேற்கொள்ளப்படாது

தற்போது வழங்கப்படும் 09 வீத வட்டியே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்



கடன் மறுசீரமைப்பின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதத்தில் எந்த குறைப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது. தற்போது வழங்கப்படும் 9 வீத வட்டி அவ்வாறே முன்னெடுக்கப்படும். அத்துடன் வங்கி கட்டமைப்பு வீழ்ச்சியடையும் என்ற 06

## பிரெஞ்சு கடற்படை கப்பல் கொழும்பில்

கடற்படையினரால் பாரம்பரிய வரவேற்பு



பிரான்ஸ் கடற்படை கப்பல் லொரெய்ன் நேற்று காலை சம்பிரதாய பயணமாக 06

## ரூ.16 கோடி திரவ தங்கம் கடத்திய ஐவர் கைது

விமான நிலையத்தில் சுங்கத்தினரிடம் சிக்கினர்



சென்னைக்கு திரவ தங்கம் மற்றும் பவுடர்களை கடத்திச் செல்ல முயன்ற ஐந்து வர்த்தகர்களை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து 06

## குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 46 பேர் நாடு கடத்தல்

39 பணிப்பெண்களும் 07 ஆண்களும் நாடு திரும்பினர்

லோரன்ஸ் செல்வநாயகம்



குவைத் நாட்டிற்கு வீட்டு பணிப்பெண்களாக சென்று அந்நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 06

தொழிலுக்கு காத்திருப்போருக்கு மகிழ்ச்சி தகவல்

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை

எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் யாழில்



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான 'குளோபல் ஃபேர் 2023' எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டு 06

## சதொச நிறுவனம் விரைவில் மறுசீரமைப்பு

அமைச்சரவை அனுமதி வழங்கியது

லோரன்ஸ் செல்வநாயகம்

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சதொச நிறுவனம் அதனை உருவாக்கிய எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை என்றும் அத்துடன் 06



03 தமிழர் பிரச்சினை குறித்து நரேந்திர மோடிக்கு கடிதம்
தமிழ் தேசிய மக்கள் முன்னணி அனுப்பி வைப்பு



03 குழந்தைகளிடையே தீவிரமாக பரவும் தட்டம்மை நோய்
அவதானமாக இருக்க சுகாதார தரப்பு எச்சரிக்கை



03 நாட்டின் வங்குரோத்து நிலை குறித்து SJB ஆராய்கிறது
சஜித் சொந்த தெரிவுக்குழுவை நியமிப்பார்

## CPC க்கு முதல் 04 மாதத்தில் 4,340 கோடி ரூபா இலாபம்

நிதி நிலை அறிக்கையில் தெரிய வந்தது

லோரன்ஸ் செல்வநாயகம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 43.4 பில்லியன் ரூபாவை (4340 கோடி) இலாபமாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் இந்த வருடத்திற்கான வருட மத்தி 06

2021ஆம் ஆண்டு கொரோனாவால் தடைப்பட்ட

## மக்கள் தொகை, வீட்டு கணக்கெடுப்பு மீண்டும்

ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி வெளியீடு



2023 – 2024 ஆண்டுகளில் மக்கள் தொகை மற்றும் வீட்டு மனை கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் 15வது 06

## சட்டவிரோதமாக தங்கம் கடத்திய இருவர் கைது

வெல்லம்பிட்டிய நபர்கள் விமான நிலையத்தில் சிக்கினர்



சட்டவிரோதமான முறையில் நகைகளை இலங்கைக்குள் கடத்தி வந்த இரு வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் 2 கோடியே 80 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் 06

அஹங்கமவில் வீட்டு நாயின் வெறிச்செயல்

## வயோதிப பெண்ணை கடித்து குதறிய நாய்

மரணிக்கும் வரை கடித்து பதம் பார்த்தது



அஹங்கம பிரதேசத்தில் வீடொன்றில் வளர்க்கப்பட்ட நாய் வயோதிப பெண் ஒருவரை உயிரிழக்கும் வரை கடித்து குதறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. 06

**91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# நகர்வலம்



## களனி பல்கலைக்கழக ஏற்பாட்டில் பாலின வேறுபாடுகளுக்கான மாநாடு











(தெஹிவளை கல்கிஸை விசேட நிருபர்)

பாலின வேறுபாடுகளுக்கான சர்வதேச மாநாடு களனி பல்கலைக்கழக பாலின ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் கொழும்பு ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம பேச்சாளராக களனி பல்கலைக்கழக பேராசிரியையும், பாலின ஆய்வு மையத்தை ஸ்தாபித்தவருமான முதற் பெண்மணி மைத்திரி விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

எழுபதுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்ட இம்மாநாட்டில், உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பாலினம் நிலையானதன்மை, அபிவிருத்தி கல்வி சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம். தொழில்நுட்பம், கண்டுபிடிப்பு, ஆண் பெண் வேறுபாடு,பாலியல் சமத்துவம் பற்றிய விரிவுரைகளை துறைசார் விரிவுரையாளர்கள் நிகழ்த்தினர். கலாநிதி அனுசா எதிரிசிங்க, களனி பல்கலைக்கழக உபவேந்தர் நிலந்தி டி. சில்வா, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி. உடவத்த உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.





கொழும்பு 13 ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பாலாலய கும்பாபிஷேகம் அண்மையில் அறங்காவலர் கனக ரகுநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த பாலாலய கும்பாபிஷேக நிகழ்வை சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய பிரதம குரு முதல்வர் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ ந. சர்வேஸ்வர சிவாச்சாரியார் நடத்தி வைத்தார்.நிகழ்வின் பின்னர், ஆலய நிர்வாகத்தினருடன் பிரதம குரு எடுத்துக் கொண்ட படம்.சுன்னாகம் கதிரமலை சிவன்ஆலய பிரதம குரு அண்மையில் தர்மபுர ஆதீனத்தால் சிவாகமபானு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பதவியை பொறுப்பேற்பு



இலங்கை சாரணர் சங்கத்தின் 15ஆவது தேசிய பயிற்சி ஆணையாளராக சிரேஷ்ட பயிற்சித் தலைவர் கேர்னல் டபிள்யூ.டி.வி பத்மலால் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை சாரணர் தலைமையகத்தில் இவர் தனது, கடமைகளை பொறுபேற்றுக் கொண்ட போது பிடிக்கப்பட்ட படம். (படம் : பாலமுனை தினகரன் நிருபர்)

## கட்சி ஆதரவாளர்களை உற்சாகமூட்டுவதற்கு விசேட சந்திப்புக்கள்

(வெலிகம தினகரன் நிருபர்)

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இதன் முதற் கட்டமாகமாத்தறை மாவட்ட தெவிநுவர தேர்தல் தொகுதி அமைப்பாளர்களைச் சந்தித்து கலந்திரையாடல்கள் நடத்தப்பட்டன.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி , இராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னச்கோன், டி.வி ஷானக பாராளுமன்ற உறுப்பினர் நிபுண

ரணவக்க முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன உட்பட மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் பலரும்

கலந்து கொண்டனர்.கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான ஆயத்தங்களை செய்தல் குறித்து ஆதவராளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

## பொறுப்பின்றிச் செயற்படும் சாரதிகளே விபத்துக்களை பொறுப்பேற்க வேண்டும்



கதுறுவெலையிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ், மன்னம்பிட்டி, கொட்டலீய பாலத்துக்குள் விழுந்ததால் ஏற்பட்ட மரணங்கள் மக்கள் மத்தியில் பரவலான அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளன. அத்துடன், இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பலரும் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப்பாலம் அமைந்துள்ள இடத்தில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் ஏற்பட்டு, மரணங்கள் சம்பவித்திருந்தன. இவ்வாறான பாரிய விபத்துகளைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் இதுவரையில் உரிய முறையில் மேற்கொள்ளாதது கவலைக்குரியது.

அதிக பிரயாணிகளை ஏற்றிக் கொண்டும், அதி வேகத்தில் வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகளே இவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, குறிப்பாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பயணிகள் பலர், இவ்விபத்தில் உயிரிழந்தும், காயமுற்றுமுள்ளனர். அவர்களுக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். விபத்தில் மரணித்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதுள்ளது.



## கலீபதுல் குலபாவுக்கு வரவேற்பு

இலங்கைக்கான கலீபதுல் குலபாவாக நியமனம் பெற்றுள்ள காலி மாவட்ட ஜம்யிய்யதுல் உலமாவின் தலைவரும், காலி அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான கலீபதுஷ் ஷாதுலி முஹம்மது ஸுஹ்ர் ஆலிமுக்கு, பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழிலதிபர் மில்பர் மக்கீன் மற்றும் பள்ளிவாசல்கள் பரிபாலன சங்க தலைவர் இம்தியாஸ் முஸம்மில் ஆகியோர் பொன்னாடை போர்த்தி விஷேட நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். புனித மக்கமா நகரில் அமைந்துள்ள உலக தரீக்கதுஷ் ஷாதுலியா தலைமையக ஆத்மீக தலைவரால் இந்நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படம்: பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

## மிஹிந்தலை எல்லைக்குள் மதுபான நிலையங்கள் அமைப்பதற்கு எதிர்ப்பு





(திறப்பனை தினகரன் நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலை நகர எல்லையிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்களுக்கு மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் திருகோணமலை பிரதான வீதியை மறித்து பிரதேச மக்கள் கடந்த (10) திங்கட்கிழமை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மிஹிந்தலை நகர மக்கள், சுற்றுவட்டார கிராமிய மக்கள் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைகழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலை ரஜ மகா விகாரையிலிருந்து பத்து கிலோ மீற்றர்களுக்குள் போதைப்பொருள் விற்பனை நிலையங்களோ, இறைச்சிக் கடையோ இருப்பது வர்த்தமானியில் தடை செய்யப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் இருந்தும்,

சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதாகக் கூறி மதுபான விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே,இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். அங்கு விஜயம் செய்த மிஹிந்தலை பிரதேச செயலாளர் திரு.அனுராதநாயக்க பண்டார, மாவட்ட சுற்றுலா அமைச்சு மற்றும் கலால் திணைக்கள பணிப்பாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## அதாஉல்லா எம்.பி தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(திராய்க்கேணி தினகரன் நிருபர் )






அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் 09.30 மணிக்கு இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலாளர் எம். ஏ.சி.அகமட் சாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், பிரதேச சபை செயலாளர் எஸ்.ஏ. பாயிஸ் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் ஜே.எம்.வாஸிர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எஸ்.ஏ. பாயிஸ், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம். இஸ்மாயில், அட்டாளச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி எம்.எச். ரஷ்மி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அட்டாளச்சேனை, திராய்க்கேணி, ஒலுவில்,பாலமுனை, ஆலம்குள கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்கள், ஆலோசனைகளை வழங்கினர். ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி திணைக்களத் தலைவர்கள் துரிதமாக எதிர்காலத்தில் தங்களது பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென ஒருங்கிணைப்பு குழு தலைவர் வேண்டிக் கொண்டார் .

இக்கூட்டம் (11) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

## கை மருந்து அருந்திய இளம் பெண் மரணம்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

குழந்தை பேறு தாமதம் காரணமாக கை மருந்து அருந்திய இளம் பெண் ஒருவர், உயிரிழந்ததாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

சீகிரிய பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய திருமணமான பெண்ணொருவரே உயிரிழந்தவராவார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணமான இவருக்கு இதுவரைக்கும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. இதனால் அவரது மாமியால் நடாத்திச் செல்லும் தேவாலயம் ஒன்றிற்கு சென்று, உள்ளூர் மருந்தினை மூன்று நாட்கள் சாப்பிட்டுள்ளார். இந்த மருந்து கொடுக்கப்பட்ட பின்னர் குறித்த பெண் நோய்வாய்ப்பட்டு நேற்று முன்தினம் (10) ஜயந்திபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையிலே இப்பெண் உயிரிழந்துள்ளார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜுலை 12 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆணி 28
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டம்;

# 9,68,000 மேன்முறையீடுகளை பரிசீலிக்க நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு தொடர்பில் 9,68,000 மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாகவும் அதனை பரிசீலிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் 17,500 ஆட்சேபனைகளும் கிடைத்துள்ள நிலையில் அதுதொடர்பில் பரிசீலிக்கும் நடவடிக்கைகளை அந்தந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி உதவி பெறும் பெருமளவு மக்கள் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதுதொடரபில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன் அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகுதியுடைய அனைவருக்கும் அதனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அதற்காகவே மேன்முறையீட்டுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இ.போ.ச. தொலைதூர சேவை நேர அட்டவணை விபரங்கள் இணையத்தில்

### அமைச்சர் பந்துல குணவர்தனவினால் ஆரம்பிப்பு



இலங்கை போக்குவரத்து சபையின் தொலைதூர சேவை பஸ் நேர அட்டவணை விபரங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் இலங்கை போக்குவரத்து சபை முதன் முறையாக நீண்ட தூர

06

## போதைப்பொருள் குற்றச்சாட்டு;

# 7 வெளிநாட்டவர்களுக்கு நீதிமன்றம் 10 வருட சிறை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



போதைப் பொருள் குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 7 வெளிநாட்டவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறு நீதிமன்ற தீர்ப்புக்கு உள்ளானவர்களில் 5 பாகிஸ்தான் பிரஜைகளும் 2 ஈரான் பிரஜைகளும் உள்ளடங்குவதாக பொலிஸ் தலைமையக ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடந்த வருடங்களில் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களின் போது மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் பத்தாம் திகதி கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 45 கிலோவிற்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் மேற்படி ஐந்து பாகிஸ்தான் பிரஜைகளும் இரண்டு ஈரான் பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 7 பேருக்குமே நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. அத்துடன் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒரு கிலோவுக்கும் அதிகமான போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நைஜீரியப் பிரஜைக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

## தமிழர் பிரச்சினை குறித்து நரேந்திர மோடிக்கு கடிதம்

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி அனுப்பி வைப்பு



ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இந்தியப் பிரதமருக்கான இக்கடிதத்தை யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா

06

## நாட்டின் வங்குரோத்து நிலை குறித்து SJB ஆராய்கிறது

### சஜித் சொந்த தெரிவுக்குழுவை நியமிப்பார்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கை எப்படி வங்குரோத்து நிலைக்குச் சென்றது என்பதை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிக்க உள்ளதாகவும், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்தும் தகவல்களை சேகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் சுயமாக குழுவொன்றை நியமிப்பதோடு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களிடமிருந்தும் தகவல்களைப் பெறுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்

06

## குழந்தைகளிடையே தீவிரமாக பரவும் தட்டம்மை நோய்

### அவதானமாக இருக்க சுகாதார தரப்பு எச்சரிக்கை



தற்போதைய காலத்தில் குழந்தைகளிடையே தட்டம்மை நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா நேற்றைய நிலவரப்படி 12 சிறுவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். காய்ச்சல் மற்றும்

06

Repeat Your Ad For Better Offers




**இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோரல்**

எதிரிசிங்ஹ முதியன்சேலாகே வசந்த குமார அகிய நான் மீகொல்ல சந்தி, ஹிந்தகொல்லவில் நடத்திச் செல்லப்படுகின்ற மளிகைப் பொருள் விற்பனை நிலையத்தில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற கலாவதியான உணவு விற்பனை செய்தல் மற்றும் காட்சிப்படுத்தல் ஆகிய குற்றங்கள் இறைச்சி மற்றும் ஐஸ்கிறீம் ஒன்றாக களஞ்சியப்படுத்தல் என்ற குற்றம் ஆகிய இரு குற்றங்களை மேற்கொண்டமைக்காக 2023.06.02ம் திகதி வழக்கு இலக்கம் 96665/23 இன் கீழ் பிலெஸ்ஸ நீதவான் நீதி மன்றத்தினால் ஒரு குற்றத்திற்கு ரூ. 10000/- வீதம் இரு குற்றங்களுக்கு ரூ. 20,000/- தண்டத் தொகை விதிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தில் கௌரவ நீதிமன்றத்தின் உத்தரவின்படி.**

**இலங்கை மக்களிடம் மன்னிப்பு**

நான் ஹப்புஆராச்சியைச் சேர்ந்த பயஸ் அப்புஹாமி, பமுனகொட்டுவா, நடகனேவை வசிப்பிடமாகவும், குருநாகல் மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் ஆர்.எஸ். பி. உரிமம் இன்றி போதைப் பொருட்களை பதுக்கி வைத்திருப்பது தொடர்பாக வாரியபொல மாவட்ட நீதிமன்றில் 19305 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் திரு. புஷ்பகுமார ராஜபக்ஷ வழக்குத் தாக்கல் செய்தார்.

மேற்படி குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டதால் இருபத்தைந்தாயிரம் ரூபாய் (ரூ.25,000.00) அபராதம் விதிக்கப்பட்டது என்பதை பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தவறை மீண்டும் செய்ய மாட்டோம் என்று தெரிவித்து, செய்த தவறுக்காக ஒட்டுமொத்த இலங்கை மக்களிடமும் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.07.10
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5171
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 8 0 8 4 4

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 480
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,006,049.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 23 25 41 62
விசேட இலக்கினம் மீனம்

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3413
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,821,457.20
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 04 06 10 65

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1519
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,531,580.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 07 11 34 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1201
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,120,232.80
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 04 17 64 65
விசேட எழுத்து L

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

**சம்பத் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்**

**31-12-2022 ஆம் திகதி வரை கைவிடப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமான சட்டபூர்வமான அறிக்கை**

- வங்கிச் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட இரண்டு வகையான கணக்குகள்/சொத்துக்களே கைவிடப்பட்ட சொத்துக்களாக கருதப்படும்.
  - பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக செயற்படுத்தப்படாமல் இருக்கும் கணக்கில் இடப்பட்ட பணம் மற்றும் வேறு வைப்புப் பணங்கள்.
  - தவணைக்காலம் பூர்த்தியாகிய பின்னர் வங்கியினால் அறிவித்தல் அனுப்பப்பட்டு 3 வருடங்களுக்குள் தொடர்பு கொள்ள தவறிய வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள்.
- வங்கிச் சட்டத்தின் பிரிவு 73(i) இன் கீழ் கைவிடப்பட்ட சொத்து என வகைப்படுத்தப்பட்டு, இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்குகள்/சொத்துக்கள் தொடர்பான கிளைகளின் அறிக்கையின் சாரம்சம் கீழே தரப்பட்டுள்ளது.
- அவ்வாறாயின் வாடிக்கையாளர்கள் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள கிளைகளில் தங்களது கணக்கு அல்லது பாதுகாப்பு பெட்டகம் கைவிடப்பட்ட சொத்துப் பிரிவுக்குள் அடங்குவதாக அனுமானித்தால், எங்களது பின்வரும் மாவட்டங்களிலுள்ள கிளைகளில் ஏதேனும் ஒன்றைத் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- மேலும் 28.07.2023 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வகையிலான கொடுக்கல் வாங்கல்களையாவது மேற் கொண்டு வங்கியில் உள்ள உங்களது கைவிடப்பட்ட சொத்துக்களை மீள செயற்படுத்துவதற்கான நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
  - பணம் வைப்பிலிடல் அல்லது மீளப்பெறுதல்
  - உங்களது தேவைக்கு ஏற்ப கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை மாற்றிக் கொள்ளல்
  - உங்களது கணக்கை செயற்படுத்துவதற்காக வங்கிக்கு கடிதம் அனுப்புதல்
  - கணக்கின் கொடுக்கல் வாங்கல்களை உங்களது சேமிப்பு புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளல்
  - பாதுகாப்பு பெட்டகம் தொடர்பில் காலாவதியாகியுள்ள தவணைப் பணத்தை மீளச் செலுத்தல்
- இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தொடர்பான கணக்கறிக்கை, அதன் இரகசியத் தன்மை மற்றும் உரிமையின் பாதுகாப்பை பேணுவதற்காகவும் மூன்றாம் நபர்களின் உரிமைக் கோரலை தவிர்க்க வேண்டியும் பிரசுரிக்கப்பட மாட்டாது.
- எவ்வாறாயினும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கைவிடப்பட்ட சொத்து தொடர்பான தனிப்பட்ட விபர அறிக்கை வங்கிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உரிய காலத்தில் அனுப்பப்படும் என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

| மாவட்டம் | கணக்குகளின் எண்ணிக்கை | மாவட்டம் | கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை - 8 கிளைகள் | 303 | குருநாகல் - 10 கிளைகள் | 501 |
| அனுராதபுரம் - 6 கிளைகள் | 218 | மன்னார் - 1 கிளைகள் | 37 |
| பதுளை - 5 கிளைகள் | 310 | மாத்தளை - 4 கிளைகள் | 67 |
| மட்டக்களப்பு - 6 கிளைகள் | 249 | மாத்தறை - 8 கிளைகள் | 256 |
| கொழும்பு - 56 கிளைகள் | 2774 | மொனராகலை - 4 கிளைகள் | 114 |
| காலி - 8 கிளைகள் | 432 | முல்லைத்தீவு - 1 கிளைகள் | 31 |
| கம்பஹா - 24 கிளைகள் | 1331 | நுவரெலியா - 3 கிளைகள் | 14 |
| அம்பாந்தோட்டை - 6 கிளைகள் | 91 | பொலன்னறுவை - 3 கிளைகள் | 85 |
| யாழ்ப்பாணம் - 8 கிளைகள் | 312 | புத்தளம் - 8 கிளைகள் | 192 |
| களுத்துறை - 10 கிளைகள் | 617 | இரத்தினபுரி - 6 கிளைகள் | 378 |
| கண்டி - 13 கிளைகள் | 320 | திருகோணமலை - 3 கிளைகள் | 89 |
| கேகாலை - 5 கிளைகள் | 322 | வன்னி - 2 கிளைகள் | 123 |
| கிளிநொச்சி - 1 கிளைகள் | 142 | | |

மேலதிக விபரங்களுக்கு எமது வாடிக்கையாளர் சேவை நிலையத்தைத் 011 2 30 30 50 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும் அல்லது அருகில் உள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடவும். அல்லது mgr.oper@sampath.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்டேர்லிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 28ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 23


### குறள் தரும் சிந்தனை



தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்

பசியின் அளவு அறியாமலும்,
ஆராயாமலும் அதிகம் உண்டால்
நோய்களும் அளவின்றி வரும்.

# நாட்டின் துரித முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் கல்விச் சீர்திருத்தம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாததாகும். கல்வி இன்றி எந்தவொரு சமூகமும் நாடும் முன்னேற்றமடைய முடியாது. ஒவ்வொரு தனிநபரதும் முன்னேற்றத்திற்கு கல்வி அளிக்கக்கூடிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

கல்வியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணராது செயற்படுவதன் விளைவாகவே பின்னடைவுகளும் பலவிதமான சவால்களும் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறான பின்னடைவுகளையும் சவால்களையும் தவிர்த்துக் கொள்வதிலேயே உலகளாவிய ரீதியில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

அந்த வகையில் ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரையும் இலவசமாகவே இந்நாட்டில் கல்வி வழங்கப்படுகிறது. இலவசக்கல்வி முறையே இந்நாட்டில் பல தசாப்தங்களாக நடைமுறையில் இருக்கின்றது. இக்கல்வி முறைமைக்காக வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வருடா வருடம் கோடானு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இந்நாட்டில் கல்வியை முன்னெடுக்கவென பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு உயர்கல்வி வழங்கவென 15 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களும் பல உயர்கல்வி நிறுவனங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

பாரிய கட்டமைப்பு வசதிகளுடன் பாரிய நிதிச் செலவில் முன்னெடுக்கப்பட்டு வரும் இலவசக்கல்வித் திட்டத்தின் பயனாக இந்நாட்டில் 92 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர். இது அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் எழுத்தறிவு மட்டமாகும். தெற்காசியப் பிராந்தியத்தில் இவ்வாறான உயரிய எழுத்தறிவு வீதத்தைப் பெற்ற ஒரே நாடாக இலங்கை விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்நாட்டின் இலவசக்கல்வி முறையில் காணப்படும் சில குறைபாடுகளின் விளைவாகவே பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து பட்டம் பெற்றவர்களும் கூட வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் நிலைமை காணப்படுகின்றது. அதனால் நவீன யுகத்திற்கு ஏற்ற வகையில் இக்கல்வி முறைமையில் சீர்த்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என கடந்த பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் இந்நாட்டின் கல்வி முறைமையை நவீன யுகத்திற்கு ஏற்ற வகையில் மறுசீரமைப்பது குறித்து தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான கல்வி மறுசீரமைப்பின் ஊடாகத்தான் 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான மாணவர்களை உருவாக்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது நாட்டில் பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமையே காணப்படுகிறது. இது குறைபாடுகள் கொண்டதாக விளங்குகிறது. இது தொடர்பில் துறைசார் புத்திஜீவிகளும் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமைக்குப் பதிலாக மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வி முறையை அறிமுகப்படுத்துவதன் அவசியம் உணரப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கல்வி முறைமையில் சீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது இது தொடர்பில் எடுத்துக்கூறியுள்ளார்.

இந்த புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்துடன் இணைந்து ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இற்றை வரையும் 13 ஆயிரத்து 800 ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். ஆங்கில மொழிக்கான பாடப் புத்தகங்களை புதுப்பிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பாடங்கள் தரம் 06 முதல் 09 வரையும், தரம் 10 முதல் 13 வரையும் என்றபடி இரண்டு குழுக்களுக்கென முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய கல்வி அமைச்சர், 'அடுத்த வருடத்திற்குள் கல்வித்துறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு இருபத்தோராம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான மாணவனை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். நிலைபேறானதும் தரமானதுமான கல்வியைக் கட்டியெழுப்புவதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சர்வதேச தரங்களுக்கு அமைய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்தல், மனித வளத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்தல் ஆகியனவும் இடம்பெறும்' என்றுள்ளார்.

இந்த புதிய கல்வி சீர்திருத்தம் 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமானதாக அமையும் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது. அவ்வாறான கல்வி முறைமையே தற்போது நடைமுறையிலுள்ள கல்வி முறைமையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கக் கூடியதாக இருக்கும். குறிப்பாக உயர்கல்வி பெற்றும் தொழிலுக்காகக் காத்திருப்பவர்களை உருவாக்காத கல்வி முறைமையாக இருக்கும். அத்தகைய கல்வி முறைமையே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# யாழ் மக்களின் அபிமானம் பெற்ற முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன்



## அன்னாரின் 24 ஆவது நினைவுதினம் நாளை

யாழ் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த வெற்றிவேலு யோகேஸ்வரன் (5 பெப்ரவரி 1934_ 13 ஜீலை 1989) தமிழ் மக்களிடையே மிகவும் பிரபலமானவராக விளங்கினார். 1989 ஜீலை 13 அவர் மறைந்தார். அவரது நினைவுதினம் நாளை ஆகும்.

மறைந்த வெற்றிவேலு யோகேஸ்வரன் இனிமையாகப் பழகுபவர். மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து நடவடிக்கை மேற்கொள்பவர். யோகேஸ்வரன் அவர்கள் ஜுலை 1977 முதல் ஜுலை 1983 வரை யாழ் வாக்காளர்களை பாராளுமன்றத்தில் பெருமையுடன் பிரதிநிதித்துவப்படுத்தினார். இந்தப் புகழ் அவருக்கு ஜனநாயக அரசியலில், தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

அவர் எழுச்சிமிக்க ஆளுமையுடன் வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்தார்.

அவர் யாழ்ப்பாணத்தில் மிகவும் மதிக்கப்பட்ட மருத்துவ நிபுணர் சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலு மற்றும் திருமதி பராசக்தி வெற்றிவேலு ஆகியோரின் மகனாவார். அமரர் யோகேஸ்வரன் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி, யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். பின்னர் ஐக்கிய இராச்சியம் சென்று சட்டம் பயின்றார். பிரித்தானியாவில் படித்த போது அவர் மாணவர்களுக்கான தேசிய ஒன்றியம், இனவொதுக்கலுக்கு எதிரான முன்னணி போன்ற அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார். வெளிநாட்டு இலங்கைத் தமிழர் முன்னணியின் ஐக்கிய இராச்சியக் கிளையின் தலைவராகவும் பணியாற்றினார்.

சட்டக் கல்வியை முடித்து விட்டு நாடு திரும்பிய யோகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து அவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,

பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி ஆகியவற்றின் உறுப்பினராக யாழ்ப்பாணத்தில் முழுநேர அரசியலுக்குத் திரும்பினார்.

இங்கிலாந்தில் சட்டக்கல்லூரி மாணவராக இருந்தபோது அங்கும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் புகழ்பெற்ற பிரிட்டிஷ் தத்துவஞானியான லார்ட் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் ஆகியோருடன் நெருக்கமாக நிறவெறி எதிர்ப்பு இயக்க அரசியலில் பணியாற்றினார்.

அணுவாயுதக் குறைப்பு மற்றும் வியட்நாம் போருக்கு எதிர்ப்பு ஆகிய இரண்டு விடயங்களிலும் அங்கு யோகேஸ்வரன் பெர்ட்ரான்ட் ரஸ்ஸலுடன் அரசியல் பிரசார அமைப்பில் பங்கேற்றார். அத்துடன் லண்டனில் உள்ள தென்னாபிரிக்க கறுப்பின ஆர்வலர்களுடன் சகோதரத்துவமும் கொண்டிருந்தார். யோகேஸ்வரன் லண்டனில் உள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் தன்னார்வத் தொண்டராகவும் பணியாற்றினார்.

இலங்கையின் வரலாற்றிலேயே முதற் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. அதேவேளையில், இலங்கை பாராளுமன்ற வரலாற்றில், முதற் தடவையாக தமிழர் கட்சி ஒன்று இரண்டாவது அதிகப்படியான 18 இடங்களைக் கைப்பற்றி 1977 இல் எதிர்க்கட்சியாக வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளரான யோகேஸ்வரன் கட்சியின் செயற்குழுவில் இணைந்து இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்பாக செயற்பட்டார். யாழ் தொகுதியில் 1977 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 6,291 அதிகப்படியான வாக்குகளால் தமிழ் காங்கிரசில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலத்தை வென்று நாடாளுமன்றம் சென்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட யோகேஸ்வரன் 9291 வாக்குகளைப் பெற்று யாழ்ப்பாணத்தில் முதலிடத்தைப் பெற்றிருந்தார். 1983 ஜுலை கலவரங்களைத் தொடர்ந்து மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காத நிலையில், 1983 ஒக்டோபர் 22 இல் யோகேஸ்வரன் யாழ் தொகுதிக்கான பாராளுமன்ற ஆசனத்தை இழந்தார். இந்திய_ இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் நாடு திரும்பினார். 1989 ஜீலை 13 இல் அவர் தமிழ் ஆயுதக்குழுவினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்னாரின் மரணம் யாழ் மக்களிடையே பெருந்துயரை ஏற்படுத்தியது. அவர் இன்றும் மக்களால் நினைவுகூரப்படுகின்றார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# செயற்கை நுண்ணறிவுக்கான (ஏ.ஐ) அரசாங்க மூலோபாயத்தில் உலகில் சவூதி அரேபியா முதலிடம்

சமீபத்தில் வெளியிடப்பட்ட செயற்கை நுண்ணறிவு அறிக்கையின் அரசாங்க மூலோபாயம் பிரிவில் சவூதி அரேபியா உலகளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன. இது உலகின் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளை மதிப்பிட்டு பெறப்பட்ட அறிக்கை என சவூதி பிரஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

உலக செயற்கை நுண்ணறிவுச் சுட்டி என்பது ஐக்கிய இராச்சியத்தினை தளமாகக் கொண்ட செய்தி வலையமைப்பான டோர்டொய்ஸ் மீடியாவால் (Tortoise Media) வெளியிடப்படும் செயற்கை நுண்ணறிவின் சர்வதேச வகைப்பாட்டின் சுட்டிகளில் ஒன்றாகும். இது 100 இற்கும் மேற்பட்ட சுட்டிகளை உள்ளடக்கியுள்ளது. இவை பின்வரும் ஏழு பிரதான வகைப்படுத்தலின் கீழ் அடங்கும். அரச மூலோபாயம், ஆராய்ச்சி, மேம்பாடு, திறன், உள்கட்டமைப்பு, இயக்க சூழல், வணிகம்.





செயற்கை நுண்ணறிவுடன் கூடிய முன் முயற்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு, செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய இலக்குகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல், ஏ.ஐ துறையை வளர்க்கும் நோக்கில் எடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் அரசாங்க நிறுவனங்களது அதீத ஈடுபாடு, தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய வியூகத்தை நிறுவுதல் போன்றன அரசு மூலோபாய பிரிவில் சவூதி அரேபியா 100 சதவீதமான மதிப்பெண்களைப் பெற காரணமாக அமைந்துள்ளன. செயற்கை நுண்ணறிவினை உருவாக்கி நிலைபெறச் செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பை சவூதி அரேபியா ஆரம்ப காலத்திலிருந்தே வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 1979 இல் சவூதி அரேபிய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையத்தை (SDAIA), ஏ.ஐ தொடர்பான அனைத்து அமைப்புகளையும், அதன் வளர்ச்சியையும் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வையிடும் பொறுப்பான மைய அதிகாரியாக நிறுவ அரச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

SDAIA இன் இயக்குநர்கள் குழுவின் தலைவரான பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமர் முஹம்மத் பின் சல்மானின் தூர நோக்கங்களையும், இராச்சியத்தின் 'விஷன் 2030' இன் நோக்கங்களையும் அடைய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான தேசியத் திட்டங்களை SDAIA சிறப்பாக வழிநடத்தியது.

சவூதியின் இச்சாதனை 'விஷன் 2030' இன் இலக்குகளுடன் ஒன்றித்துப் பயணிக்கிறது, இது பல்வேறு தளங்களில் உலகளாவிய குறிகாட்டிகளில் சவூதி அரேபியாவானது முக்கிய இடத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**காலித் ரிஸ்வான்...**

# அட்டாளைச்சேனை அல்-நஜா கழகத்தினால் கௌரவிக்கப்பட்ட பிரதி பணிப்பாளர் றியாஸ்

அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகத்தினால் அம்பாறை மாவட்டஅனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஏ.சி.எம்.றியாஸ் பிரதிப் பணிப்பாளராக அண்மையில் பதவி உயர்வு பெற்றிருந்தார்.



அட்டாளைச்சேனை பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்ட இவர், பல்வேறு சமூகப் பணிகளில் மிக நீண்ட காலமாக தன்னை அர்ப்பணித்து வருகின்ற ஒருவராக பாராட்டப்படுகின்றார். அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராக செயற்படும் இவருக்கு கழகத்தினால் 2023.07.09 ஆம் திகதி கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது.

கழகத்தின் தலைவர் ஏ.எம்.றிஸ்வான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கழகத்தின் சிரேஷ்ட, கனிஷ்ட நிருவாக உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# கல்வி, கலைஇலக்கிய துறைகளில் தலைசிறந்த ஆளுமையாக விளங்கிய ஆசான் பிர்தௌஸ்

## மருதமுனையில் கௌரவிப்பு நிகழ்வு

ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக, அறிவிப்பாளராக, நடிகனாக, சிறந்த மேடைப் பேச்சாளனாக, இலக்கிய விமர்சகராக, வருகைதரு விரிவுரையாளராக என்றெல்லாம் பல்வேறு தளங்களில் தம்மை நிலைநிறுத்தி தமிழ்த்துறை சார் பரம்பரையினை உருவாக்கிய தமிழாசான் பிர்தௌஸ் ஆவார்.

நூற்றாண்டு கடந்து நிற்கும் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் ஆளுமைகளுள் பிர்தௌஸ் ஒருவர். அப்பாடசாலையின் மாணவத் தலைவர், கலை இலக்கிய குழுவின் முதன்மையாளர் உள்ளிட்ட பதவிகளை அலங்கரித்ததுடன் கவிதை, நாடகம், அறிவிப்பு, சஞ்சிகையாக்கம் அடங்கலான பல்வேறு துறைகளிலும் தம்மை அடையாளம் காட்டினார்.

1984 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழக மாணவனாக உள்வாங்கப்பட்ட பிர்தௌஸ் அவர்கள், கலைத்துறைப் பட்டதாரியாக வெளியேறி, தாம் சார்ந்த தமிழ்த்துறையின் கலாநிதி பட்டம் வரை உயர்ந்தார்.

1990.03.20 இல் மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று ஒன்பது ஆண்டுகள் சிறப்புப் பணி செய்ததன் பின்னர் 10.11.1999 இல் ஆசிரிய ஆலோசகராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டார். பின்னர் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகிய அவர் வலயத்தில் பணியாற்றிய காலத்தில் ' நிலை மாற்று முகவர்' (2010), கசடற(2020) ஆகிய நூல்களையும் கலாநிதிப் பட்ட ஆய்வான 'கிழக்கிலங்கை தமிழ் நாவல்கள் சமூக,அரசியல் நோக்கு' என்ற நூலையும் வெளிக்கொணர்ந்து பாராட்டுப் பெற்றார்.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமன்றி நாட்டின் பல இடங்களிலும் பிரத்தியேக கற்பித்தல் பணியாற்றி மாணவர்களின் உள்ளத்தை வென்றார்.

ஆசிரிய ஆலோசகராகப் பதவி வகித்த காலத்தில் ஜனாதிபதி சந்திரிகாவினால் (2002) 'வித்தியா பிரசாதினி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய 23 வருட காலத்தில் சிறந்ததொரு வளவாளராக, ஆசிரிய கண்காணிப்பாளராக, அறிவிப்பாளராக, ஆசிரியர் வாண்மை விருத்தி நூல் வெளியீட்டாளராக, கலை நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பாளராக துறைசார் முதலாவது கலாநிதியாக எனப் பல தளங்களில் பணியாற்றினார்.





நடனக் கலைஞரான பிர்தௌஸ் இலங்கையின் முன்னணி நடன ஆசிரியையாகத் திகழ்ந்த நிருந்தகி வசந்தி சபாநாதனின் மாணவராவார். வடஇலங்கை சங்கீத சபையின் 3 ஆம் தரம் பூர்த்தி செய்த ஒரே முஸ்லிம் மாணவர் என்ற பெருமையைப் பெற்றார்.

கல்முனை மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பல நடன அரங்குகளைச் சந்தித்த கலாநிதி பிர்தௌஸ், அன்றைய கல்வி அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரனால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1988 ஆம் ஆண்டு அறிவிப்புத் துறைக்காக ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1980 'சலனங்கள்' என்ற பிராந்திய குறுந்திரைப்படத்தில் கதாநாயகன் பாத்திரமேற்று நடித்தார். தேசிய ரீதியில் 'சிறந்த தனி நடிகர்' விருதினை 1988 இல் பெற்றுக் கொண்டார். இவ்வாறு பல தளங்களில் பயணித்த கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் 31.12.2022 இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அன்னாருக்கான ஓய்வுக்குப் பிந்திய கௌரவமாக அவரது வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய 'தீரா ஆசிரியம்' நூல் வெளியீட்டுடன் பணிநயப்பு கௌரவிப்பு நிகழ்வொன்று அண்மையில் மருதமுனை அல்மனாரில் அரங்கேறியது.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)




## இராகலை தோட்ட தீ விபத்து

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தனிவீடுகள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும்

இராகலை தோட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிவீடுகளை அமைத்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் வலியுறுத்தியுள்ளார்.



இராகலை இலக்கம் (01) தோட்டத்தில் கடந்த 05.07.2023 அன்று இடம்பெற்ற தீ விபத்து சம்பவத்தில் 20 வீடுகள் எரிந்து நாசமாகியதுடன் அதில் வசித்த 18 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் நிர்க்கதியாகியுள்ளனர்.

இதனையடுத்து தற்காலிக தங்குமிடங்களில் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அங்குள்ள நிலைமைகளை கண்டறிவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் நேற்றுமுன்தினம் மாலை அப்பிரதேசத்துக்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். நமது உறவுகள் மலையகத்திற்கு வந்து 200 வருடங்கள் ஆகியும் பாதிப்புகள் பலவற்றை அனுபவித்து வருகின்றனர்.

முதலில் லயன் வாழ்கையில் இருந்து விடுப்பட்டு தனிவாழும் வகையில் அவர்களுக்கு தனி வீடுகளை அமைத்து கொடுக்க வேண்டும்.

இந்த நடைமுறையை முன் வைத்து நாம் கடந்த காலங்களில் தனி வீடு அமைக்கும் திட்டத்தில் இறங்கி செயற்பட்ட போதிலும் அதற்கு அரசியல் மாற்றம் காரணம் தடைப்பட்டது.

இருப்பினும் தனிவீடுகளை அமைத்து அதில் மக்களை குடியமர்த்தி வாழவைக்கும் முயற்சிகள் கைவிடப்படவில்லை. எனவே மலையகத்தில் இனி வரும் காலங்களில் தோட்ட தொழிலாளர் மக்களுக்கு வீடமைப்பு உள்ளிட்ட அனைத்து அபிவிருத்தி திட்டங்களையும் செய்வதற்கு அரசியல் தலைமைகள் அரசியல் வேறுபாடுகளை களைந்து செயற்படும் நேரம் இது.

ஆகையால் இராகலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனி வீடுகளை அமைத்து அவர்களை வாழ வைப்பதில் அரசியல் பேதங்களை புறம் தள்ளிவிட்டு அனைவரும் கைகோர்த்து நடவடிக்கைகள் எடுப்போம் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**ஆ.ரமேஸ்**

# கனகர் கிராம மக்களை மீள்குடியேற்ற ஏற்பாடு

## ஆளுநர் நடவடிக்கை



யுத்தகாலத்தில் கனகர் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களை மீண்டும் அதே பிரதேசத்தில் மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் பேரில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான புனர்வாழ்வு வேலைத்திட்டத்தை அமைத்து கொடுப்பதற்கான நடவடிக்கையை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்டுள்ளார். 1987 ஆம் ஆண்டு உச்ச யுத்தத்தின் போது இராணுவத்தினரால் கனகர் கிராமத்தில் உள்ள 500 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இக்காணிகளில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான சுத்திகரிப்பு வேலைத்திட்டம் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசனின் கோரிக்கையின் பேரில் உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் IBC ஊடகத்தின் தலைவர் பாஸ்கரன் ஆகியோரின் ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன.

# பாடசாலை மாணவர்களுக்கு எருமைகளால் தொல்லை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பாடசாலை சென்று கொண்டிருந்த மாணவர்கள் சிலரை எருமைகள் விரட்டிச் சென்றமையால் காயமடைந்த ஐந்து மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பத்கொடை சந்தியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுகாலை பத்கொடை சந்தியிலிருந்து ப/விவேகானந்தா தமிழ் பாடசாலைக்கு சென்றுக் கொண்டிருந்த மாணவர்களே இந்நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளனர். பாதிப்புக்குள்ளான மாணவர்கள் அனைவரும் 10, 11 வயதுகளையுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. எருமை மந்தை மேய்ப்பாளர் ஒருவரால் எருமை மாடுகளை வீதியில் கொண்டு செல்லும் போதே இடையில் குழம்பிய எருமை மாடுகள் மாணவர்களை விரட்டிவந்ததாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் மாணவர்கள் எவருக்கும் ஆபத்தான நிலமை இல்லை என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# மலையகத்தில் புதிதாக அமைக்கவுள்ள மதுபான கடைகளை தடுத்து நிறுத்த போராடுவேன்

மலையக மக்களின் மாற்றத்திற்கு கல்வி அபிவிருத்தியடைய வேண்டுமே தவிர மது விற்பனை நிலையங்கள் அல்ல என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.



அத்துடன் மலையகத்தில் புதிதாக முளைத்து வரும் மதுபான கடைகளை அமைக்கவிடாது வேர் பிடுங்க பாராளுமன்றத்தில் உள்ளேயும்,மக்களுடன் வெளியேயும் இறங்கி போராடுவேன் என எச்சரித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் வாழும் பிரதேச நகரங்களை இலக்காக கொண்டு இயங்கும் மதுபான கடைகளுக்கு அப்பால் புதிய மதுவிற்பனை நிலையங்களை உருவாக்க அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதனடிப்படையில் டயகம நகரில் புதிய மதுக்கடையொன்றை அமைக்கவுள்ளனர். அதற்கு எதிராக டயகம பிரதேச இளைஞர்கள்,பாடசாலை மாணவர்கள்,சமய குருக்கள் உட்பட பொது மக்களும் போராடி வருகின்றனர்.

இதுகுறித்து இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பிரதேச மக்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர். பிரதேச மக்களின் கோரிக்கை நியாயமானது. காரணம் மலையகத்திற்கு இன்று மதுக்கடைகள் முக்கியமல்ல. மாறாக பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களில் மாற்றத்தை ஏற்படுத்த கல்வி விருத்திக்கு இடமளிக்க வேண்டும் என்பதே எமது இலக்காகும் என அவர் தெரிவித்தார்.

# மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**



முஸ்லிம் பாடசாலைகள் மாணவ தலைவர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு அண்மையில் மாத்தளை அரச விஞ்ஞான கல்லூரியில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் மேஜர் என்.டீ.நசுமுதீன் தலைமையில் நாட்டின் பல மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக இத்தகைய செயலமர்வுகள் நடைபெற்றுவருகின்றன.

அதற்கமையவே அண்மையில் மாத்தளையில் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்பயிற்சி செயலமர்வில் மாத்தளை, கலேவலை, வத்தேகமை, கடுகஸ்தோட்டை ஆகிய கல்வி வலயங்களின் முஸ்லிம் பாடசாலைகள் மாணவத் தலைவர்கள் பங்கு பற்றியதோடு மாத்தளை அரச விஞ்ஞான கல்லூரி மாணவர்களும் பங்குபற்றினர்.

இப்பயிற்சி செயலமர்வில் வளவாளர்களாக பேராதனை பல்கலைக்கழகத்தின் அரபு மற்றும் இஸ்லாமிய கற்கை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எம்.இஸட்.எம் நபீல், மத்திய மாகாண பிரதி கல்வி பணிப்பாளர் எம்.ஏ.எம் உனைஸ், மகாவலி தேசிய கல்விக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மேஜர் எஸ்.பி. விதான பதிரன, மாத்தளை அரச விஞ்ஞான கல்லூரியின் அதிபர் திருமதி.ஹேரத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர் அமைப்பு இதற்கான பூரண அனுசரணை வழங்கினர்.

## நீர்த்தேக்கத்திலிருந்து மீட்கப்பட்ட சடலம் அடையாளம்

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்த வயோதிப தாயின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

திம்புலபத்தனை தோட்டத்தில் வசிக்கும் பெருமாள் பேரமாய் என்ற 67 வயதுடைய வயோதிப தாயொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கணவனை இழந்த இவருக்கு பிள்ளைகளும் இல்லாமையால் தங்கையின் மகனின் பாதுகாப்பில் இருந்துவந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கடந்த 9ஆம் திகதி வீட்டைவிட்டு சென்ற இவர் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

# தலவாக்கலையில் கடைகள் உடைத்து திருட்டு




**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் இரவு 4 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியின் அருகாமையிலுள்ள மருந்தகம், வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம்,ஹாட்வெயார் மற்றும் டயர் கடை ஆகியனவே இவ்வாறு இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளது. ஹாட்வெயாரிலுள்ள மூன்று இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார். அதேவேளை ஏனைய கடைகளில் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக கடை உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# இஸ்லாமிய புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலைகளில் விசேட நிகழ்வுகள்

## கல்விப் பணிப்பாளர் மேஜர். என். ரீ. நசுமுதீன்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

இஸ்லாமிய புதுவருடப் (முஹர்ரம்) 2007.20.23 தினத்தை முன்னிட்டு முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய மார்க்க நல்லுபதேசங்கள் மற்றும் இஸ்லாமிய கல்வி கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கான நிகழ்வுகளை நடத்தி அத்தினத்தை சிறப்பிக்குமாறு கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் மேஜர். என். ரீ. நசுமுதீன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையானது முஸ்லிம் சமய கலாசார பாரம்பரிய விழுமியங்களுக்கு ஏற்ப மாணவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதனூடாக பரந்த கல்வி இலக்கை அடைய முற்படல் எனும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இஸ்லாமிய புது வருடத்தை ஞாபகப்படுத்தும் இஸ்லாமிய மார்க்க நல்லுபதேசங்கள் மற்றும் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளுக்கு முன்னுரிமை வழங்கி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் தங்களது பாடசாலைகளில் மேற்படி நிகழ்வுகளுடன் முடியுமான பொருத்தமான போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்துமாறு அறியத்தருகின்றேன்.

மேற்படி நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகஸ்தர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர்கள் பங்கு பற்றச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இக்காலப் பகுதியில் பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பரவாத வண்ணம் பாடசாலைச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதும் அவசியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக கல்வியை திட்டமிட்ட பொறிமுறையுடன் மேம்படுத்த நடவடிக்கை



**மாவத்தகம தினகரன் நிருபர்**

'மலையகம் 200 வருடங்களை கடந்துவிட்ட நிலையில் மலையகக் கல்வியை மேம்படுத்த சரியான பொறி முறைகள் இல்லா விட்டால் வெற்றி இலக்கை அடைய முடியாது. எனவே மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டை திட்டமிட்ட அடிப்படையில் அதற்கான பொறிமுறைகளுடன் கல்விப் பணியை அபிருத்தி செய்ய வுள்ளோம் என்று

த லெடர் நிறுவனத்தின் இயக்குனர் எம். ஸ்ரீகாந்தன் தெரிவித்தார்.

த லெடர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' தின நிகழ்வை முன்னிட்டு மலையக மாணவர்களிடையே கல்வி எழுச்சியை மேம்படுத்தும் வகையில் உயர் தரத்தில் சித்தியடைந்த,க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்கள் உயர் கல்வியை மற்றும் தொழில் கல்வியைப் பெறுவதற்கான இலவச கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. த லெடர் நிறுவனத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்களுள் ஒருவரான எம். ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



பேருவளை மாலிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் பீ.ஆர். குமாருக்கு சமூக சேவையாளர் பாஸி ஸுபைர் நினைவுச்சின்னம் வழங்கும்போது பிடிக்கப்பட்ட படம். படத்தில் பிரதி அதிபர் எம்.எஸ்.எம். நப்ஹான், உதவி அதிபர்களான மர்ளியா காமில், தஹுரா தாஹிர் ஆகியோரையும் காணலாம்.

## அனுமதிப்பத்திரமின்றி வாகனம்...

ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, சாரதியின் முழுமையான கவனயீனம் காரணமாகவே மன்னம்பிட்டி பஸ் விபத்து ஏற்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவருகின்றது. அந்த விபத்து தொடர்பில் முழுமையான விசாரணையை மேற்கொண்டு அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு நான் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

## ரூ.16 கோடி திரவ தங்கம்...

நேற்று பகல் கைது செய்துள்ளனர். இதன் பெறுமதி பதினாறு கோடியே நாற்பது இலட்சம் ரூபாவாகும். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய வர்த்தகர்கள் நால்வரும் 55 வயது வர்த்தகர் ஒருவரும் இந்த திரவ தங்கப் பொதிகளை விமான நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர். இவர்கள் நேற்று பிற்பகல் 01.55 மணியளவில் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் 6E1176 இல் இந்தியாவின் சென்னைக்கு செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளில் 08 கிலோ 650 கிராம் எடையுள்ள 23 திரவ தங்க வில்லைகள் மற்றும் தங்கப் பொடி அடங்கிய 10 பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சுங்க அதிகாரிகள் அவற்றைக் கண்டுபிடித்து கைது செய்துள்ளனர்.

## முன்னாள் ஜனாதிபதியினால்...

உயர் நீதிமன்றில் பிரேரணை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான 85 மில்லியன் ரூபாயை 2024 ஜுன் 30 ஆம் திகதி முதல் வருடத்துக்கு 8.5 மில்லியன் ரூபாய் வீதம் 10 தவணைகளாக செலுத்தப்படும் என அவர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதனடிப்படையில், எஞ்சியுள்ள இழப்பீட்டை 2024 ஆம் ஆண்டு ஜுன் 30 முதல் 2033 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 வரை வருடாந்தம் வழங்குவதற்கு அனுமதிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி தனது பிரேரணையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கடற்றொழில் சங்கங்களின்...

போது (11) வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

புதிய சட்டங்கள் தொடர்பில் சாதக, பாதக தன்மைகள் தொடர்பில் முற்கூட்டியே அமைச்சருடன் கலந்துரையாட வேண்டும். இந்நிலையில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இலங்கையில் உள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களிலும் புதிய கடற்றொழில் சட்டம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## EPF வட்டி வீதத்தில் எந்தவித...

எதிர்க்கட்சிகளின் பிரசாரம் பொய்யாகியுள்ளதென ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டின் மொத்த கடன் தொகை 83பில்லியன் டொலராகும். அதில் வெளிநாட்டு கடன் 41பில்லியன் டொலர். உள்நாட்டு கடன் 42 பில்லியன் டொலராகும். வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் 17 பில்லியன் டொலர்களை குறைத்துக்கொள்ளவும் 15 வருடங்களுக்கு கடன் தவணை நீடிப்பு வழங்குவதற்கும் அந்த நாடுகள் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு விஜயங்களின் போது கடன் வழங்கிய நாடுகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடி இந்த இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டிருக்கிறார். அதேநேரம் உள்நாட்டு கடனில் 2 பில்லியன் டொலர்களை குறைத்துக்கொள்வதை உறுதிப்படுத்துமாறும் அந்த நாடுகள் கோரி இருக்கின்றன. அதன் பிரகாரமே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு அரசாங்கம் சென்றது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்போது வங்கி கட்டமைப்புக்கு பாரிய ஆபத்து ஏற்படும் என்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதம் குறைக்கப்படும் எனவும் எதிர்க்கட்சிகள் பொய் பிரசாரம் மேற்கொண்டு மக்களை ஏமாற்றி வந்தனர். ஆனால் எதிர்க்கட்சிகள் தெரிவித்ததுபோல் எந்த விடயமும் இடம்பெறவில்லை.

## பிரெஞ்சு கடற்படை கப்பல் கொழும்பில்...

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் கடற்படை பாரம்பரிய முறைப்படி வரவேற்பளித்தனர்.

142.20 மீ. நீளமுள்ள இந்த கப்பல் 154 பணியாளர்களால் நிர்வகிக்கப்படுகின்ற வான் பாதுகாப்பு பல்நோக்கு போர்க்கப்பல் ஆகும், மேலும் இது கெப்டன் சேவியர் BAGOT ஆல் வழிநடத்தப்படுகிறது.

இதற்கிடையில், கப்பலின் கட்டளை அதிகாரி மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித்தார். அவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

லொரெய்ன் சனிக்கிழமை (ஜுலை 15) தீவை விட்டு வெளியேறத் திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இக்கப்பல் இலங்கை கடற்படையின் கப்பலுடன் ஒரு கடவுப் பயிற்சியையும் நடத்தவுள்ளது.

## குவைத்தில் சட்டவிரோதமாக...

46 இலங்கையர்கள் அங்கிருந்து நேற்று அனுப்பப்பட்டுள்ளதுடன் நேற்று அதிகாலை அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அவர்கள் நீண்டகாலமாக குவைட் நாட்டில் சட்டவிரோதமாக விசா எதுவுமின்றி தங்கியிருந்துள்ளதுடன் பின்னர் அவர்கள் பல்வேறு நோய்களுக்குள்ளாகியும் தனிப்பட்ட சிக்கல்கள் மற்றும் அவர்களின் இலங்கையிலுள்ள குடும்பங்களுடன் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவும் அங்கு தங்கியிருந்ததுடன் அவர்கள் இலங்கைக்கு வருவதற்காக இலங்கை தூதுவராலயத்தில் பதிவுசெய்திருந்தனர். இதுவரை அவ்வாறு வீட்டுப் பணிப்பெண்களாக சென்றிருந்த 2000க்குமதிகமான இலங்கையர்கள் குவைட் இராஜ்ஜியத்தின் தூதுவராலயத்தில் பதிவுசெய்துள்ளதாக அங்குள்ள தூதுவர் காண்டீபன் பாலசுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு...

அரங்கில் நடைபெறவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார (10) அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், சிலர் நினைக்கிறார்கள் நாங்கள் தெற்கை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் என்று. ஆனால் எமக்கு வடக்கு, தெற்கு என்ற வேறுபாடு இல்லை. நாங்கள் முழு நாட்டையும் ஒரே நாடாகவே கருத்திற்கொண்டு செயல்படுகின்றோம்.

வடக்கிற்கு நடக்கும் அநீதிகள் பற்றி பேசும் போது, தெற்கில் ஒரு முன்னோடித் திட்டத்தை முன்னெடுத்து அதன் முதல் வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றோம். இதன்மூலம் ஆள் கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களை தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கு பயிற்சி பெறாதவர்களுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்கள், வெளிநாட்டு வேலைக்கு செல்லவும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் செயல்பட்டு வருகிறோம் என்றும் அமைச்சர் கூறினார்.

## சதொச நிறுவனம்...

அந்த நிறுவனம் நாட்டின் பொருளாதாரத்திற்கு எதிர்பார்த்த பங்களிப்பை வழங்கவில்லையென்பதனை கருத்திற்கொண்டு சதொச நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான தேவை இனங்காணப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

அதற்கிணங்க கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நிறைவேற்றல் மற்றும் கண்காணிப்பு குழுக்களை நியமித்து உத்தேச மறுசீரமைப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

தினகரன் | தினகரன் வாரமஞ்சரி | LAKE HOUSE

### திறந்த கட்டுரைப் போட்டி

**தொனிப் பொருள்**

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

**பரிசுத் தொகை**

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

**கட்டுரையின் வடிவம்**

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீதியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.


## CPC க்கு முதல் 04 மாதத்தில்...

அறிக்கையை வெ ளியிட்டுள்ளதுடன் அரச நிதி நிலமை தொடர்பான அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நான்கு மாதத்தில் மசகு எண்ணெய் கொள்வனவிற்காக 277.1 மில்லியன் டொலரையும் எரிபொருள் கொள்வனவுக்காக 1,009.3 மில்லியன் டொலரையும் செலவிட்டுள்ளதாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த காலத்திற்குள் இறக்குமதி செய்துள்ள பெற்றோலிய உற்பத்தி பொருட்களின் மொத்த பெறுமதி 877.35 மில்லியன் டொலராகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலத்தில் அரசாங்கமானது எரிபொருள் கொள்வனவுக்காக 1,599.7 மில்லியன் டொலரை செலவிட்டுள்ளதுடன் அது மொத்த இறக்குமதி செலவில் 30% வீதமாக அமைவதாகவும் நிதியமைச்சின் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## மக்கள் தொகை, வீட்டு...

மக்கள்தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்பு 2021 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அதை ஒத்திவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இலங்கையில் முதலாவது சனத்தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்பு 1871 ஆம் ஆண்டு நடத்தப்பட்டதுடன் இறுதியாக சனத்தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்பு 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. மேற்படி கணக்கெடுப்பு பொதுவாக பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக தங்கம்...

வசிக்கும் 44 வயதுடைய வர்த்தகர்கள் இருவரே இவ்வாறு நகைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அடிக்கடி விமானம் மூலம் வெளிநாடுகளில் இருந்து பொருட்கள் கொண்டு வருவது தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் (10) அதிகாலை 02.20 மணியளவில் இந்தியாவின் சென்னையில் இருந்து இந்தியன் எயார்லைன்ஸின் AI273 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். 01 கிலோ 780 கிராம் எடையுள்ள நகைகள் இவர்களது பயணப் பொதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நகைகள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வயோதிப பெண்ணை...

நாய் கடித்ததில் குறித்த பெண் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அஹங்கம திகபெத்த, கோதாகொட கமகே பகுதியைச் சேர்ந்த தயாவதி என்ற 76 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் (10) இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் போது மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாய் கடித்ததில் பலத்த காயங்களுக்குள்ளான பெண், காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

## ஜனாதிபதி ரணிலை சந்தித்துரையாடிய...

தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு, இந்தியா வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார். அதேபோல், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அடுத்த இந்திய விஜயம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததோடு, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோஹன் குவத்ரா சந்தித்து கலந்துரையாடினார்.

## ஒரு வாரத்தில்...

அந்தப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார் என்று குற்றச்சாட்டின் பேரில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்திருந்த போது, போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாட்டைவிட்டு வெ ளியேறியிருந்தார். அந்த நிலையிலேயே தொடர்ந்தும் அவர் இந்த சொற்பொழிவுகளை நடத்தி பெருமளவு நிதியை சம்பாதித்து வருகின்றார் என்றும் அந்த சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு தெரிவிக்கின்றது.

## A/L பரீட்சைக்கான ...

தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த அமைச்சர்,

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் அடுத்த மாத நடுப் பகுதியில் அதன் பெறுபேறுகளை வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

அதேவேளை, நவம்பர் மாதத்தில் உயர்தர பரீட்சையை நடத்துவதுடன் அடுத்த வருடத்திற்கான அனைத்து பரீட்சைகளையும் உரிய காலத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு எதிர்கொண்ட கொவிட் சூழ்நிலை காரணமாக கல்வித் துறையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பாடசாலைகளை முறையாக நடத்த முடியாத நிலை காணப்பட்டது. அத்துடன் உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை முன்னெடுப்பதில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆரம்பத்தில்ஒத்துழைப்பு வழங்காமையும் சிக்கலாக அமைந்தது. எனினும் கல்வித் துறையில் எதிர்பார்க்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அடுத்த வருடத்திற்கான....

2048 ஆம் ஆண்டிற்குள் வறுமையற்ற நாட்டை உருவாக்குவதற்கு பதிலாக அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதே எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (11) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1.2 மில்லியன் மக்களை உற்பத்திப் பொருளாதாரத்துடன் இணைத்து அவர்களை வலுவூட்டும் திட்டம் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், பாடசாலை செல்லும் வயது முதல் முதியோர் வரை பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டும் வேலைத்திட்டம் இதில் உள்ளடங்கும் என்றும் குறிப்பிட்டார்.

அஸ்வெசும பலன்களைப் பெறுவதற்கான மேன்முறையீட்டுக் கால அவகாசம் கடந்த 10ஆம் திகதி நிறைவடைந்ததாகவும், தகுதியுடையவர்களுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதினால் மேலும் அது நீடிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், இம்முறை விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கு அல்லது மேன்முறையீட்டு மனுக்களை சமர்ப்பிக்க முடியாதவர்களுக்கு ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் மீண்டும் அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டில் உள்ள 18 இலட்சம் சமுர்த்திப் பயனாளர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்கள். இளமையில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டாலும் 60 வயதை கடந்த பின்னரே சமுர்த்தி வேலைத்திட்டத்தில் அவர்கள் இணைந்தனர். அது குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதுடன், சமூக பாதுகாப்பு சபையின் பங்களிப்புடன் ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## கடம்ப மரம்...

100 வருடங்கள் பழமையானது, இதனை அவ்விடத்தில் இருந்து அகற்ற இடமளிக்க முடியாது" எனக் கூறப்பட்டது. இதனை அகற்றாது பாதையை அமைத்தால் மேலதிகமாக 15 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும்.

நாடு பாரிய பொருளாதார சிக்கலில் வீழ்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அதிவேகப் பாதையை எவ்வாறாவது பூர்த்தி செய்ய முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில், இந்தத் திட்டத்தை மேற்கொள்ள பிரதேசத்தில் 40 வருடங்களுக்கு மேல் பழமையான 15 கடம்ப மரங்கள் உள்ளதாக அறிக்கைகள் தெரிவித்தன. 12 அடி , 15 அடி உயரமான 25 மரங்கள் காணப்பட்டன. இதனை பார்க்க விரும்பும் எவருக்கும் திட்டத்துக்கு பொறுப்பான அதிகாரிகள் அதனை காண்பிப்பதற்கு தயார். இந்த மரங்களுக்கு பதிலாக 200 மரங்களை மீண்டும் நடுவதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் அனைத்தையும் நான் அமைச்சரவை குழுவிற்கு அறிவித்துள்ளேன். இது மிகப்பெரிய குற்றம், பொய், கட்டுக்கதை நாடு பூராவும் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொண்ட நிலைமையாகும் எனவும் அதனை சூழவுள்ள மரங்களின் எண்ணிக்கை தொடர்பாகவும், தாவரவியல் நிபுணர்களால் போதுமான அளவு தாவரங்களை உற்பத்தி செய்து கொடுக்க முடியும் என சுட்டிக்காட்டி இந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு அமைச்சரவையின் அனுமதியை நான் கோரியிருந்தேன். போதுமான அளவு மரகளை மீள நடக்கூடியதாக காணப்படும் வேளையில் 15 பில்லியன் ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தாது தேசிய தேவைக்காக இந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு தேவையான அனுமதியை அமைச்சரவை பெற்றுக் கொடுத்தது.

அதன்படி இந்த மரம் அமைச்சரவையின் பூரண அனுமதியுடனேயே வெட்டியகற்றப்பட்டது.

அது அரசின் கொள்கை முடிவாகும். இவ்வாறான பெறுமதி வாய்ந்த முடிவுகளை இந்நாட்டின் நிபுணர்கள் மற்றும் நாட்டின் உரிமையாளர்கள் சரித்திர காலத்தில் பாரிய தியாகங்களை மேற்கொண்டு எடுத்துள்ளார்கள்.

## நாட்டின்... (03 ஆம் பக்கத் தொடர்)

திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் நியாயத்தன்மை குறித்து வினவியபோது, எந்த நேரத்திலும் எந்தவொரு அரச அதிகாரியையும் விசாரணைக்கு அழைக்கலாம் என சபாநாயகர் வழங்கிய தீர்ப்பை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு செய்வார் என அத்தநாயக்க தெரிவித்தார்.

“எதிர்க்கட்சித் தலைவர் எந்த நேரத்திலும் எந்த அரச அதிகாரியையும் அழைத்து விசாரணை நடத்தலாம் என சபாநாயகர் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளார். எனவே பிரேமதாச ஒரு குழுவை நியமிப்பது சட்டபூர்வமானதாக இருக்கும்” என்றும் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்படும் குழுவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இருதரப்பு எம்.பி.க்கள் இருப்பார்கள்.

சபாநாயகர் நியமித்த தெரிவுக்குழுவில் இருந்து அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளனர். குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களும் அதன் தலைவரும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற அரசாங்கத்தின் உறுப்பினர்களாக இருப்பதால் இது எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குழந்தைகளிடையே.... (03 ஆம் பக்கத் தொடர்)

சிவப்பு புள்ளிகள் இந்த நோயின் அறிகுறிகளில் என்று அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கடந்த சில வருடங்களில் சிறுவர்களுக்கு புற்றுநோய் பாதிப்புகள் பதிவாகி வருவதாக தெரிவித்த மருத்துவர், ஒவ்வொரு வருடமும் 19 வயதுக்குட்பட்ட 900க்கும் அதிகமான சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதுதவிர ஆண்டுதோறும் சுமார் 100 குழந்தைகள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவதாகவும் இது போன்ற பாதிப்புகள் அதிகரித்து வருவதாகவும் குழந்தைகளை கையடக்கத்தொலைபேசியிலிருந்து விலக்கி வைப்பதே சிறந்தது எனவும் தெரிவித்துள்ள மருத்துவர், குழந்தைகளின் உணவில் எண்ணெய், சர்க்கரை போன்றவற்றை முடிந்தவரை பயன்படுத்தாமல் இருந்தால் நாளை ஆரோக்கியமான குழந்தைகள் சமூகத்தை உருவாக்கலாம் என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

## இ.போ.ச. தொலைதூர... (03 ஆம் பக்கத் தொடர்)

பஸ் சேவை நேர அட்டவணை இணையதள தேடல் தளத்தை (10) ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் பயணிகள் மிக இலகுவாக 1315.lk இணையதளம் மற்றும் 1315.lk கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டின் மூலம் இந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கிணங்க பயணிகளுக்கு தமது பயணத்தை முன்கூட்டியே திட்டமிடக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முழு நாட்டையும் இணைக்கும் வகையில் பஸ் பிரயாணங்களுக்கான ஆசனங்களை ஒதுக்குவதற்கும் இதன் ஊடாக சந்தர்ப்பம் கிடைக்கும்.

sltb.eseat.lk அல்லது 1315.lk என்ற இணையதளம் மூலம் பயணிகள் ஆசனங்களையும் ஒதுக்கிக் கொள்ள முடிவதோடு பயணிகள், போக்குவரத்து தகவல்களை பெற்றுக் கொள்தல் போன்ற அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள கூடிய வசதிகள் அதில் காணப்படுகின்றன.

ஆசனங்கள் ஒதுக்கப்பட்டவுடன் e. ticket பயணிகளுக்கு எஸ். எம். எஸ் மற்றும் ஈமெயில் ஊடாக அனுப்பப்படும். அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, போக்குவரத்துத் துறையை டிஜிட்டல் மயப்படுத்தும் கொள்கையின் ஒரு நடவடிக்கையாக இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் ஆசனங்களை ஒதுக்க மற்றும் நேர அட்டவணையை பெறுவதற்கான இணையத்தள வசதியை வழங்கும் இவ்வேலைத்திட்டம் மிகவும் முக்கியமானதாகும்.

இதன் மூலம் போக்குவரத்து துறையில் ஏற்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை குறைத்து நிறுவனத்தை லாபமீட்டும் ஒன்றாக குறுகிய காலத்தில் மாற்ற முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் ,பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தமிழர் பிரச்சினை... (03 ஆம் பக்கத் தொடர்)

கஜேந்திரன் கையளித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த மாத இறுதியில் இந்தியாவிற்கு விஜயம் செய்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார். இந்த நிலையில் ஈழத் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள், அரசியல் தீர்வுகளை சுட்டிக்காட்டி இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகள் பல இணைந்து ஒருமித்து கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றன. இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக இந்திய பிரதமருக்கு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வெவ் சபாவ

கௌரவ ஜனாதிபதி
**ரணில் விக்கிரமசிங்க அவர்களின்**
தலைமையில்

கௌரவ பிரதமர்
தினேஷ் குணவர்தன அவர்களின்
ஆசீர்வாதத்துடன்

கௌரவ நீர்ப்பாசன அமைச்சர்
ரொஷான் ரணசிங்க அவர்கள்
மற்றும்

கௌரவ நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்
ஷஷீந்திர ராஜபக்ஷ அவர்களின்
முழுமையான மேற்பார்வையின் கீழ்

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படும் உலக வங்கி கடன் நிதித் திட்டமான
காலநிலை பாதிப்பை குறைக்கும் பல் கட்ட திட்ட நுழைவு (CResMPA)
மற்றும்
ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர் வள முகாமைத்துவ திட்டத்தின் (IWWRMP)

கீழ் செயற்படும் பிரதான திட்டங்களுக்கு அப்பால் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு பலம் சேர்த்து, விவசாயிகளுக்கு குறுகிய கால நேரடி நன்மைகளை பெற்றுத்தரும் நோக்கில்

## 25 மில்லியன் அமெரிக்க டொலர்

நிதி ஒதுக்கீட்டின் கீழ்
உடைந்து சேதமடைந்துள்ள குளக் கட்டுகள் மற்றும் கால்வாய் அணைகளை புனரமைத்து,
விவசாய உற்பத்தியை அதிகரிக்கும்

## " வெவ் சபாவ "

தேசிய திட்டத்தின் அங்குரார்ப்பணம்
கௌரவ ஜனாதிபதி தனது பதவியை ஏற்று
ஓராண்டு நிறைவையொட்டி
நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பமாகும் வகையில்

**2023 ஜூலை மாதம் 13 ஆம் திகதி**
**மு.ப. 10.01 க்கு**

இடம்பெறும் சுப நேரத்தில் ஆரம்பமாகும்!

நீர்ப்பாசன அமைச்சு

வெவ் சபாவவின் கீழ் செயற்படுத்துவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள 1500க்கும் அதிகமான உப திட்டங்களில் இந்த நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் மாவட்ட மட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட உப திட்டங்கள்

| மாவட்டம் | உப திட்ட விபரம் |
|---|---|
| பொலன்னறுவ | கிரிதலே இடது கரை பிரதான கால்வாய் புனரமைத்தல் |
| கண்டி | முரப்பொல கால்வாய் (19 Field) canal புனரமைப்பு |
| ஹம்பாந்தோட்டை | லுனுகம்வெஹெர பகுதி 6 வயல் வெளிகளின் 34 துறை கால்வாய்களை (Field canal புனரமைத்தல் |
| மொனராகலை | கிவுல குளத்தின் இடது மற்றும் வலது கால்வாய்களை 500 மீற்றர் நீடித்தல் |
| கம்பஹா | தம்மிட நீர்ப்பாசன கட்டமைப்பின் 350 மீற்றர் நுழைவு பாதையை புனரமைத்தல் |
| மாத்தறை | கடவத்துவ நீர்ப்பாசன கட்டமைப்பின் கழிவுநீர் கால்வாய் பாதையை புனரமைத்தல் |
| நுவரெலியா | மா கால்வாயின் 1500 மீற்றர் பிரதான கால்வாயை புனரமைத்தல் |
| அநுராதபுரம் | பதவிய மேல் பிரதான கால்வாயின் 3 ஆம் கிலோமீற்றரில் சப்பாத்து பாலத்தின் புனரமைப்பு மற்றும் வான் பகுதியை புனரமைத்தல் |
| இரத்தினபுரி | கல்தொட்ட நீர்ப்பாசன கட்டமைப்பின் இடது பக்க பிரதான கால்வாய், 1ஆவது பிரிக்கும் கால்வாய் மற்றும் 3ஆவது துறை கால்வாயை (Field canal) புனரமைத்தல் |
| புத்தளம் | நிலபெம்ம நீர்ப்பாசன திட்டத்தின் குடா ஒட்டுபல்லம மத்திய இடது கால்வாய் மற்றும் 2ஆவது துறை கால்வாயை புனரமைத்தல் |
| குருணாகல் | மடுல்ல திட்டத்தின் வெள்ளத்தால் சேதமடைந்த கொலமுனு ஆற்றின் இரு பக்கக் கரைகளையும் பலப்படுத்தல் |
| அம்பாறை | ரதல்ல திட்டம் (Scheme) வலது கரை கால்வாய் புனரமைப்பு |
| திருகோணமலை | ஜனரஞ்சன குளக் கட்டமைப்பின் மத்திய இடது கால்வாயின் 400 ஆவது மீற்றர் தூரத்தில் நான்கு முனை மதகு ஒன்றை நிர்மாணித்தல் |
| கேகாலை | பிலவெள வயல் வெளியின் கால்வாய் கட்டமைப்பை புனரமைத்தல் |
| களுத்துறை | பொல்கொட நீர்ப்பாசன கட்டமைப்பின் பட்டிய எலிய கால்வாயின் 2500 மீற்றரை புனரமைத்தல் |
| மட்டக்களப்பு | பலயாடி ஓடையின் குளக் கட்டின் 167 மீற்றர் பகுதியை மேம்படுத்தல் மற்றும் வான் பகுதி மற்றும் கால்வாய் பாதையை சீரமைத்தல் |
| கொழும்பு | ஹெட்கே ஓயாவின் அத்துருகிரிய மத்திய கால்வாயின் 96 வது கிலோமீற்றர் தூ ரத்திலுள்ள ரெகுலேட்டருக்கு இரும்பு கதவு அமைத்தல் |
| மன்னார் | மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள பல்லன்கொடிவாவி குளத்தின் 13ஆவது தூணுக்கு அருகில் வான் பகுதியை புனரமைத்தல் |
| வவுனியா | பாவற் குளம் பிரதான கால்வாய் மேம்பாடு |
| கிளிநொச்சி | ஊரியான் குளத்தின் பெதும் கால்வாய் 1 புனரமைத்தல் |
| முல்லைத்தீவு | வவுனிக்குளம் இடது கரை கால்வாயை புனரமைத்தல் |
| யாழ்ப்பாணம் | வடமராச்சி வாவி நீர்ப்பாசன கட்டமைப்பின் அணையை புனரமைத்தல் |
| காலி | திபன்லத்த கால்வாய் புனரமைப்பு |
| மாத்தளை | வெமடில்ல திட்டத்தின் வெலமிரியாவ குளத்தின் D – Canal புனரமைப்பு |
| பதுளை | உமா கால்வாயின் புனரமைப்பு |



யு.டி.சீ. ஜயலால்
செயலாளர்
நீர்ப்பாசன அமைச்சு

CResMPA IWWRMP THE WORLD BANK

www.wawsabhawa.lk wawsabhawa@gmail.com /wawsabhawa /wawsabhawa /@wawsabhawa

# கிழக்கின் குரல்



# அக்கரைப்பற்றில் விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

## கலையரசனிடம் எம்.பி. உதவி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு



**வாச்சிக்குடா விசேட நிருபர்**

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகோரி அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து திங்கட்கிழமை (10) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அக்கரைப்பற்று மணிக்கூட்டுக் கோபுரம் முன்பாக ஒன்றிணைந்து பல்வேறு சுலோக அட்டைகளை தாங்கி, பேரணியாக அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியூடாக சின்னப்பள்ளி வரை சென்று அங்கிருந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் வரை சென்றனர்.

பிரதேச செயலகம் முன்பாக தமது எதிர்ப்பினை வெளியிட்ட விவசாயிகள், அங்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரனிடமும் உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகரிடமும் கோரிக்கை அடங்கிய மகஜர்களை கையளித்தனர். சிறுபோக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் விளைச்சல் குறைவடைந்தமையினால் தாம் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் அரசினால் வழங்கப்பட்ட மானியப்பணமும் பணமாக வழங்கப்படாமல் வவுச்சர் மூலமாக வழங்கப்பட்டு, கண்துடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர். இதனை கண்டித்தும் நெல்லின் உத்தரவாத விலையினை கிலோ ஒன்றிற்கு 100 ரூபாவும் காய்ந்த ஈரப்பதனற்ற நெல்லினை 120 ரூபா வரை அதிகரித்து விவசாயிகளின் முழு உற்பத்தியையும் அரசு நெல்சந்தைப்படுத்தும் அதிகார சபை மூலம் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர். இதேநேரம் தனியாரும் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், மானிய பணத்தை பணமாக வழங்கவும் அல்லது விவசாயிகள் விரும்பும் உரத்தை கொள்வனவு செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்போரட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் கருத்து வெளியிட்டதுடன், அதிகளவான விவசாயிகள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.



கல்முனை வலய முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் முகம்மட் பௌஸை கௌரவித்து, இஸ்லாமா பாத் வித்தியாலயத்தில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் அதிபர்.ஏ.ஜீ.றிசாத் நினைவுச் சின்னம் வழங்குவதையும் அருகில் ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: நற்பிட்டிமுனை தினகரன், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்)

# மட்டக்களப்பு கடற்கரை பிரதேசம் சுத்திகரிப்பு



**ஏறாவூர் நிருபர்**

உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'பூச்சியம் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்' திட்டத்திற்கு இணைவாக அரசாங்கத்தினால் பல்வேறு செயல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறையினை ஊக்குவிக்கும் திட்டத்தினையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக மட்டக்களப்பு, வாகரை, மாங்கேணி கடற்கரைப் பிரதேசம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஹேலீஸ் விவசாய நிறுவனத்தினால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ.கே. பத்தேகம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறைவேற்று அதிகாரி எஸ்.கே.என்.எப். சிறிவர்தன மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாங்கேணி பிரதேச கடற்கரை சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் இதன்போது சுத்தம் செய்யப்பட்டது.

இதன்போது சுமார் ஐந்து தொன் எடையுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் இருநூறு பைகளில் சேகரிக்கப்பட்டன.

இப்பொருட்கள் கடலிலிருந்து கரையொதுங்கியவையாகும்.

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் கடற்கரைப் பிரதேச சுத்திகரிப்புப் பணிகள் பெரிதும் அனுகூலமாக அமையுமென்றும், கடற்கரைச் சுத்திகரிப்பு திட்டத்திற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி இதனால் மீதமாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



**நிந்தவூர் குறூப் நிருபர்**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் மூன்று பிரதான கோரிக்கைகளை முன்வைத்து ஞாயிற்றுக்கிழமை (09) ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை மேற்கொண்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களைச் சேர்ந்த மாணவர்களால், பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி, பிரதான வீதியினூடாக பேரணியை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் சென்றவர்களால் பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டிருந்தது டன், குறிப்பாக பொது மக்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல போன்ற கொடுப்பனவுத் தொகையை அதிகரிக்க வேண்டும். மருந்துகளின் விலைகளை குறைக்க வேண்டும் போன்ற பிரதான கோஷங்களை முன்வைத்தனர்.

# மெல்ல கற்கும் மாணவர்களுக்கு விசேட வாசிப்பு முகாம்

**ஏறாவூர் சுழற்சி நிருபர்**

பாடசாலைகளில் மெல்ல கற்கும் மாணவர்களின் நன்மை கருதி, ஏறாவூர் நகர சபை தமது நூலகங்களில் விசேட வாசிப்பு முகாம் ஒன்றினை ஆரம்பிக்க உள்ளதாக, ஏறாவூர் நகர சபையின் செயலாளரும் விசேட ஆணையாளருமான எம்.எச்.எம்.ஹமீம் தெரிவித்தார்.

கற்றல் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ள பாடசாலை மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன், பாடசாலைகளின் ஒத்துழைப்புகளையும் ஆலோசனைகளையும் பெற்று நகர சபையின் நிருவாகத்தின் கீழ் உள்ள நூலகங்களில் இவ்வாறான விசேட வாசிப்பு முகாம்கள் நடாத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறான மாணவர்களை பாடசாலை வகுப்புக்கள் ரீதியாக அடையாளங்கண்டு அவர்களுக்கான பயிற்சி முகாம்களை நடாத்துவது தொடர்பாக, பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு சனிக்கிழமை (08) நகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் உலக தரிசன நிறுவனத்தின் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சுரோலின் மற்றும் நகர சபையின் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஹாரூன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் ஏறாவூர் நகர சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நிரந்தர நியமனம் வழங்குமாறு டெங்கு தடுப்பு உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

**நிந்தவூர் குறூப் நிருபர்**



ஏழு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் தங்களை நிரந்தரமாக்குமாறு கோரி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகப் பிரிவில் கடமையாற்றும் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் செவ்வாய்க்கிழமை (11), காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொவிட் தொற்று முதல் இன்று வரைக்கும் பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் தங்களது விடயத்தில் அரசு பாராமுகமாக செயற்பட்டு வருவதாகவும், தங்களுக்குப் பிறகு 100,000 (ஒரு இலட்சம்) தொழில் வாய்ப்பின் மூலம் வழங்கப்பட்ட நியமனங்களுக்கு, தற்போது நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் பொது மக்களின் நன்மை கருதி பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் தங்களுக்கு இதுவரைக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல், அரசாங்கம் காலம் தாழ்த்தி வருவதாக இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

அகில இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நாடு தழுவிய இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது டன், ஒப்பந்த அடிப்படையில் கல்முனை பிராந்தியத்தில் 44 டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கடமையாற்றி வருவதுடன், அகில இலங்கை ரீதியில் 1140 பேர் டெங்கு தடுப்பு உதவியாளர்களாக கடமையாற்றி வருவதாக அகில இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர்கள் சங்கத்தின் தலைவர் கே. முஸம்மில் தெரிவித்தார்.

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் பல்பொருள் விற்பனை நிலையம்

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்**



கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிள்ளையாரடியில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட வளாகத்தில் பல்பொருள் விற்பனை நிலையம் திங்கட்கிழமை (10) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா.சசிகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.சிவலிங்கம், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வீ.கனகசிங்கம், பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.ஈ.கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ரீ.சதானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந் நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வீ.தங்கவேல் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் ஏ.பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதிதிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட வளாகத்தில் COOP Fresh பல்பொருள் விற்பனை நிலையம் அதிதிகளினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் குறித்த COOP Fresh பல்பொருள் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டமையினால், இங்கு கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுநூலகத்தில் E–Paper அறிமுகம்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளச்சேனை பொது நூலகத்தில் சகல நாளாந்த பத்திரிகைகளுக்கான E Paper அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள், வாசகர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்கள் மாத்திரம் அல்லாமல் புத்திஜீவிகளும் நேரம் காலம் பாராது எவ்வேளையிலும் பார்க்கக் கூடிய வசதி வாய்ப்பினை அட்டாளைச்சேனை பிரதேச சபை நூலகத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.



கல்முனை லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் பட்டமளிப்பு விழாவும், வருடாந்த நிகழ்வும் பாலர் பாடசாலை அதிபர் எஸ்.தஸ்லி உம்மா தலைமையில் ஞாயிற்றுக் கிழமை (09) நடைபெற்றது. இந்நிகழ்வின்போது சிறார்களின் "சிறுவர் சந்தை" பொது மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக கல்முனை அஸ்ஸுஹறா வித்தியால அதிபர் திருமதி எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா கலந்து கொண்டார். (படம்: கல்முனை குறூப் நிருபர்)

# மீனவர் தொழிற்சங்க பிரதிநிதிகள் மருதமுனைக்கு விஜயம்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கம் முதன்முதலாக கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (9) விஜயம் மேற்கொண்டனர். இதன்போது மருதமுனை மீனவர்களால் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்க பிரதிநிதிகள் வரவேற்கப்பட்டதுடன், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மீனவ அமைப்புகளையும் அரவணைத்துச் செயற்படுகின்ற திட்டத்தின் ஓரங்கமாகவே இவ் விஜயம் அமைந்தது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த வருடம் ஜூன் மாதம் கொழும்புக் கடற்கரையில் தீக்கிரையானது. இதன் மூலம் நாடளாவிய ரீதியில் மீனவர்களுக்கு மிகப் பாரதூரமான தொடர் பாதிப்புகள் நேர்ந்துள்ளன.

இந்நிலையில், அரசாங்கத்தால் நஷ்டயீடாகப் பெறப்பட்டுள்ள பல கோடி ரூபாய் இழப்பீடு நாடளாவிய ரீதியில் மீனவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று முன்வைத்து, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கம் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

மருதமுனை 06 மக்பூலியா மீன் பிடிச்சங்கத்தால் அகில இலங்கை மீனவர் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

# கவிஞர் கலைமேகம் இப்றாஹிம் காலமானார்

**மூதூர் தினகரன், கந்தளாய் தினகரன் நிருபர்கள்**

மூதூர் நொக்ஸ் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட மூத்த பெரும் கவிஞரும், சிறுகதை எழுத்தாளரும், இலக்கிய கர்த்தாவுமான கலைமேகம் இப்றாஹிம் (80) திங்கட்கிழமை (10) தனது இல்லத்தில் காலமானார்.

1967 ஆண்டிலிருந்து சிறு கதை, எண்ணற்ற மரபுக் கவிதை,வானொலி நாடகம், நாட்டார் பாடல், கட்டுரைகள் என எழுதி இலக்கிய வளர்ச்சிக்கு பாரிய தொண்டாற்றியவருமாவார்.

அன்னாரில் ஜனஸா நல்லடக்கம் மூதூர் நடுத்தீவு மஸ்ஜிதுல் ரஹ்மான் ஜும்ஆ பள்ளிவாசலில் ஜனஸா தொழுகை நடாத்தப்பட்டு மூதூர் பெரியபள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# தினகரன் Business

## பெருந்தோட்ட தொழில் துறைக்கான முதலாவது Global Plantation Summit ஐ நடத்தும் ஹேய்லிஸ்



முற்போக்கான தோட்ட முகாமைத்துவத்தில் இலங்கையின் முன்னோடிகளான ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ், ஆரம்ப சர்வதேச பேண்தகைமை உச்சி மாநாட்டை ஆரம்பித்துள்ளதாக அறிவித்தது. எதிர்வரும் காலங்களில் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், தோட்டத் தொழிலை மறுவடிவமைக்கும் ஆற்றலுடன் கூடிய அதிநவீன புத்தாக்கங்களை வெளிப்படுத்துவதற்காகும்.

புத்திஜீவிகள், அரசு மற்றும் அரசு சாரா அதிகாரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, இந்த மாநாடு 21 ஜூலை 2023 நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு 'நிலையான தோட்டங்களை நோக்கி மறுவடிவமைக்கப்பட்டது ' மறுவடிவமைப்பு செய்யப்பட்டது 'நெகிழ்ச்சியானது' என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது. ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) நவீன தோட்ட முகாமைத்துவ உத்திகளில் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

ஹேய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த சர்வதேச நிலைத்தன்மை உச்சிமாநாட்டை நடத்துவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், ஏனெனில் இது சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் நிலையான நிர்வாகத்தை நோக்கி நீண்ட கால மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தொழில்துறை முழுவதும் பங்குதாரர்களை ஒன்றிணைப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பாகும். இந்த முயற்சியானது, தொழில்துறை முழுவதும் நேர்மறையான மாற்றம் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்கும் அதே வேளையில் அர்த்தமுள்ள உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான தளமாக செயல்படும் என்று நாங்கள் நம்புகிறோம்." என தெரிவித்தார்.

BIO (Biosphere), GEO (Geosphere), SOCIO (Social) மற்றும் ECONO (Economy) ஆகிய துறைகளை ஒருங்கிணைப்பதில், தோட்ட நிர்வாக மாதிரிகளில் நிலையான, நெறிமுறை மற்றும் சமமான மதிப்புகளைப் பகிர்ந்து கொள்வதில் மாநாடு கவனம் செலுத்தும்.

உச்சிமாநாட்டின் நோக்கங்களில் வணிக செயல்முறைகளின் நீண்டகால ஸ்திரத்தன்மையை வரையறுக்கும் தனித்துவமான நிலையான காரணிகளை அடையாளம் காணுதல், தற்போதைய சவால்களுக்கு சாத்தியமான நீண்டகால தீர்வுகளை முன்மொழிதல், பொதுவான சவால்களுக்கு பல துறை ஒத்துழைப்புக்கான தளத்தை உருவாக்குதல் மற்றும் நீண்ட கால சிறந்த நடைமுறைகளை இயக்குதல் ஆகியவை அடங்கும்.

## மின் கட்டணத் திருத்தங்களை வரவேற்கும் JAAF

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் (PUCSL) ஜூலை டிசம்பர் காலப்பகுதிக்கான மின்சாரக் கட்டணத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களை கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) வரவேற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணத் திருத்தங்கள் தொழிற்துறை சமர்ப்பிப்புகள் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாமல், நெரிசல் இல்லாத (Offpeak) நேரங்களில் தொழிற்துறை மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இதனால் செயற்பாட்டுச் செலவுகள் முக்கியமாக அதிகரித்ததால், நெரிசல் இல்லாத (Offpeak) நேரங்களில் வேலையின்மை பிரச்சினைக்கான அவதானம் காணப்பட்டது. மேலும் இந்த காலகட்டத்தில் ஆடைத் தொழிலின் போட்டி மற்றும் ஒட்டுமொத்த நிலைத்தன்மைக்கும் பிரச்சினையாக இருந்தது.

புதிய திருத்தங்கள் ஒட்டுமொத்த தொழில்துறை மின் கட்டண விகிதங்களை சுமார் 9% குறைத்துள்ளன. JAAF இந்த நடவடிக்கையைப் பாராட்டினாலும், உலகச் சந்தையின் பாதகமான நிலைமைகளின் காரணமாக, ஆடைத் துறையின் ஏற்றுமதி செயல்திறன் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அதிக தொழில்துறை மின் கட்டணக் குறைப்புகளை மின்சார ஒழுங்குமுறை நிறுவனம் பரிசீலிக்கும் என்று தொழில்துறையினர் நம்புகின்றனர். மே 2023 இல் ஆடை மற்றும் துணி ஏற்றுமதி வருமானம் 14.55% குறைந்துள்ளதால், தொழில்துறை மின்சாரக் கட்டண விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழிற்துறையினர் மேலும் செயல்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும் அனுகூலங்களை அடைய முடியும்.

## இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவராக பிரதாபன் மயில்வாகனம் நியமனம்




இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனத்தின் (SLCPI) 62 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களை உள்ளடக்கிய நாட்டிலுள்ள தனியார் மருந்து சந்தையில் 80% க்கும் அதிகமான பங்கைக் கொண்ட 60க்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அமைப்பாகச் சேவையாற்றிவருவதுடன் மதிப்புமிக்க கறையற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது.

2022/2023 ஆம் ஆண்டிற்கான சம்மேளனத்தின் தலைவராக பிரதாபன் மயில்வாகனத்தை சபை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது. Emerchemie NB (Ceylon) Ltd இன் பிரதித் தலைவர்/குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி. இவர் புதிய அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட சம்மேளனத்திற்குத் தலைமை தாங்குவார், இதன் மூலம் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் ஆயுட்காலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அனைத்து பங்குதாரர்களுடனும் வலுவான பங்களிப்பை மேற்கொள்வார்.

பிரதாபன் தனது சிறப்புரையில்,

தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு (NMRA) விலை நிர்ணய பொறிமுறையை கடைப்பிடிப்பது முக்கியம் என்று குறிப்பிட்டார், ஏனெனில் தொழில்துறையானது பொருளாதார மந்தநிலையின் விளைவுகளை எதிர்நோக்கும் போது அதிகாரிகளால் அமுல்படுத்தப்பட்ட 16% குறைப்பை எதிர்கொண்டது. நோயாளிகளை மையமாகக் கொண்ட விலைக் குறைப்பை தொழில்துறை எதிர்க்கவில்லை என்றாலும், இறுதி சில்லறை விலையை நிர்ணயிப்பதில் மருந்துத் துறையின் தனிப்பட்ட செலவினங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

## சிறுவர்களின் கல்விக்கு ஆதரவளிப்பதற்காக DFCC Read the Way




இலங்கையில் அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, புத்தகங்கள் மூலம் உலகை ஆராயும் வழிமுறையில் கற்கின்ற கலாசாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உள்ள சிறுவர்களின் கல்விக்கு ஆதரவளிக்கும் புதிய முயற்சியொன்றை ஆரம்பித்துள்ளது. DFCC Read the Way நிகழ்ச்சித்திட்டமானது, இலங்கையில் உள்ள பின்தங்கிய சிறுவர்களுக்கு, குறிப்பாக தரமான கல்வியைப் பெறுவதில் நிதிச் சிக்கல்களை எதிர்கொள்பவர்களுக்கு, புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் கல்வி சார்ந்த உதவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் சிறுவர்களுக்கு வாசிப்புக் கலாசாரத்தை வளர்ப்பதன் மூலமும், வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும், எதிர்கால தலைவர்களாக மாறுவதற்கு தேவையான கருவிகளை வழங்குவதன் மூலமும் சிறுவர்களுக்கு வலுவூட்டவும், தைரியப்படுத்தவும் முயல்கிறது.

2030 ஆம் ஆண்டிற்கான அதன் நிலைபேற்றியல் மூலோபாயம் மற்றும் தொலைநோக்கினால் வழிநடத்தப்படும் கல்வியானது, முதியோர், சுற்றுச்சூழல், உடற்பயிற்சி, அவசரகால நிவாரணம் மற்றும் தொழில்முயற்சியாண்மை ஆகியவற்றுடன் வங்கி கவனம் செலுத்தும்.

## அமானா வங்கி புதிய கிளை வலையமைப்பை விரிவாக்கம் செய்துள்ளது



நாடு முழுவதிலும் தனது சேவை வலையமைப்பை விரிவாக்கம் செய்வதையிட்டு அமானா வங்கி பெருமை கொள்கின்றது.

அதன் பிரகாரம் தற்போது 55 பிரதேசங்களில் தனது வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லில், 33 முழுமையாக இயங்கும் வங்கிக் கிளைகள் மற்றும் 22 சுய வங்கிச் சேவை நிலையங்கள் போன்றன அடங்கியுள்ளன.

கல்ஹின்ன, மடவல ஆகிய பகுதிகளில் அண்மையில் நிறுவப்பட்ட சுய வங்கிச் சேவை நிலையங்கள், அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர், பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், உப தலைவர் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு சித்தீக் அக்பர், பிரதேசத்தின் வியாபார பிரமுகர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டன. இல. 226/3, பள்ளிவாசல் வீதி, கல்ஹின்ன எனும் முகவரியில் அமைந்துள்ள கல்ஹின்ன சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக 24/7 நேரமும் பண மீளப் பெறுகைகள், பண வைப்புகள் மற்றும் காசோலை வைப்புகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதுடன், அங்கு காணப்படும் வாடிக்கையாளர் சேவை அதிகாரிகளினூடாக இதர வங்கிச் சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறான சேவைகளை, இல. 227/2/2 கண்டி வீதி, மடவல எனும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ள கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## விசுவமடுவில் மக்கள் வங்கி சேவை மையம் திறந்து வைப்பு



மக்கள் வங்கி தனது புதிய சேவை மையத்தை விசுவமடு நகரில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

பண மீள்சுழற்சி இயந்திரம் (CRM) உள்ளிட்ட நவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை இச்சேவை மையம் வழங்குகிறது. இது வருடத்தில் 365 தினங்களும், நாளில் 24 மணி நேரமும் பணம் மீளப் பெறுதல், வைப்புக்கள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு செலுத்துதல் ஆகியவற்றுக்கு இடமளிக்கின்றது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார, வன்னி பிராந்திய முகாமையாளர் ஏ. ஜயசித், தர்மபுரம் மத்திய கல்லூரியின் அதிபர் திருமதி கந்தசாமி இந்தேகாந்தி, மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவி பிராந்திய முகாமையாளர்கள் எஸ். பி.சூரியகுமாரன், எஸ்.வி.ஜி. ஜே.செல்லையா, பரந்தன் கிளை முகாமையாளர் எம்.ஏ.பிரான்சிஸ், விசுவமடு சேவை மைய முகாமையாளர் ஜி.ஜெயகணேசன், அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சீன நிறுவனங்கள் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு




சீன நிறுவனங்களிடமிருந்து கடந்த 10 மாதங்களில் கூட்டு முயற்சி திட்டங்களுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலங்கை பெற்றுள்ளது. இலங்கையில் இதுவரை வராத தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இந் நிறுவனங்கள் வந்துள்ளன.

இன்டர்லைன் ஜெம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் பேருவளை, இரத்தினபுரி மற்றும் காலி வீதி கொழும்பு 3 ஆகிய இடங்களில் கிளைகளை கொண்டுள்ளது. இதன் தலைவர் இஃஹாம் ஹனிப், இரத்தினக்கற்கள் விற்பனைக்காக சீனாவிற்கு வழமையான விஜயங்களை மேற்கொள்பவர். பல்வேறு தொழில்களில் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அவர்கள் பின்பற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பார்த்ததாகவும் கூறினார்.

35 வருடங்களுக்கும் மேலாக குடும்ப வியாபாரத்தை நடத்தி வரும் ஒரு தேசப்பற்றுள்ள குடிமகன் என்ற வகையில், இந்த சீன நிறுவனங்களை இலங்கைக்கு கொண்டு வந்து உள்ளூர் பங்காளிகளை கண்டுபிடிப்பதன் மூலம் இலங்கை அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்பதை உணர்ந்தேன்.

இந்த நோக்கத்தை மனதில் கொண்டு நான் எனது நிறுவனத்தை ஒரு 'முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக' பன்முகப்படுத்தினேன் மற்றும் ஏற்கனவே கூட்டு முயற்சிகளை ஆரம்பித்துள்ள பல சீன நிறுவனங்களை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளேன்."

அத்தகைய ஒரு சீன நிறுவனம் பன்னாட்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது மற்றும் ஏற்கனவே மூன்று சக்கர வாகனங்களை மின்சாரத்துக்கு மாற்றத் தொடங்கியுள்ளது என்றார்.

## DFCC வங்கியின் புதுப்பிக்கப்பட்ட தனிப்பட்ட வருமான வரி கணிப்பான்



இலங்கையில் அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, தேவைக்கு பதிலளிக்கும் வகையில், தக்க தருணத்தில், பயன்பாட்டுக்கு இலகுவான, புதுப்பிக்கப்பட்ட மற்றும் சக்திவாய்ந்த தனிப்பட்ட வருமான வரிக் கணிப்பான் ஒன்றை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. DFCC வங்கியின் தனிப்பட்ட வருமான வரி கணிப்பானைப் பயன்படுத்தி, வரிக் கணிப்பீட்டு செயல்முறையை எளிதாக்கும் ஆற்றல்மிக்க மற்றும் விரிவான கருவிகளைப் பயன்படுத்தி, 2022 ஏப்ரல் 01 முதல் 2023 மார்ச் 31 வரையிலான உங்கள் வருடாந்த வரிப் பொறுப்பை நீங்கள் உடனடியாக சுயமதிப்பீடு செய்யலாம். ஒரு சில கிளிக்குகளில் அதிகபட்ச துல்லியத்தன்மைக்காக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ள சமீபத்திய தனிநபர் வருமான வரிக் கொள்கைகளுடன் சீரமைக்கப்பட்டு, இக்கணிப்பான் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

DFCC வங்கியின் தனிப்பட்ட வருமான வரி கணிப்பான், ஆற்றல்வாய்ந்த மற்றும் விரிவானதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இது பயனர்கள் தங்கள் வருமான விபரங்களை உள்ளிடவும் மற்றும் அவர்களின் வரிக் கடமைகள் பற்றிய உடனடி மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளவும் இடமளிக்கிறது. .

உங்கள் வரிக் கடப்பாடுகளை எளிதில் விளங்கிக் கொள்ள, https://www.dfcc.lk/calculators/incometaxcalculator/ ஐப் பார்வையிடுவதன் மூலம் DFCC வங்கியின் வருமான வரி கணிப்பானைப் பார்க்கவும்.

# வடக்கின் உதயம்

## மன்னார் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் வருடாந்த பரிசீலனை



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த பரிசீலனை மற்றும் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு, மன்னார் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் மன்னார் தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

இதன்போது, மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ்.சந்திரபால பரிசீலனையை மேற்கொண்டதுடன், பொலிஸ் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து, மன்னார் நகரினூடாக பொலிஸ் அணிவகுப்பு மரியாதை சிறப்பான முறையில் நடைபெற்றது.

### இந்திய மீனவர்களின் அத்துமீறல்

## தமிழக தலைவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு வடக்கு, கிழக்கு எம்.பிக்கள் முன்வர வேண்டும்

**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்**



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே எனவும் இலங்கை கடற்படையினர் அல்ல எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

**மாவட்ட பொது வைத்தியசாலை மொனராகல**

# வளிச்சீராக்கி இயந்திரங்கள் மற்றும் கணனிகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

01. மொனராகல, மாவட்டப் பொது வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுத்தலைவரினால் பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்காக 2023.08.03 வரையிலான காலப்பகுதியில் பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| இலக்கம் | உபகரணம் | வழங்க வேண்டிய எண்ணிக்கை | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 12000 BTU A/C Machine | 03 | 2000.00 |
| 02 | 24000 BTU A/C Machine | 08 | 2000.00 |
| 03 | 48000 BTU A/C Machine | 01 | 2000.00 |
| 04 | Deskrtop Computer | 10 | 2000.00 |

விலைமனுதாரரெருவரின் சார்பாக முன்வரும் தகவுத்திறன்களைக் கொண்டுள்ள முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதியொருவரினால் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளும் முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றின் மூலம் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

i. மொனராகல மாவட்டப் பொது வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்று
ii. மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலைவயின் கணக்காளருக்குச் செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக்கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு
iii. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் போட்டோப்பிரதியொன்று

02. இவ் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரம் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். வேறு விதமான மாதிரிப்படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விலைமனுப் படிவங்களை இலவசமாகப் பரீசீலனை செய்து கொள்ளலாம்.
04. 2023.08.03 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. 2023.08.03 அன்று பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு இவ்வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் அவை திறக்கப்படுவதுடன் அனுதிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
06. எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக் கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.
07. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உருப்படியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**விசாரணைகள்:**
**அலுவலகம்**
**0552276261-104**

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**மொனராகல.**

CSIAP THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

### Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)

**Project No: P163742**
**IFB No: 2023/10**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank in the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.
2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

| Lot No | Contract No | Description of Work | Estimated Total Cost Excluding VAT(LKR) | CIDA Registration | Non -refundable Fee (LKR) | Bid Security Value in (LKR) and Validity Date |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-309672-CW-RFB /NP/ DPDO/ Machinery Yard(06)/2022/63 | Machinery Yard Construction at Mulliyawalai ASC, Maritimepattu DS Division, Puthukudiyiruppu ASC Puthukudiyiruppu DS Division, Oddusuddan ASC,Oddusuddan DS Division and Thunukkai ASC, Thunukkai DS Division at Mullaitivu District in Northern Province. | 23.7 Mn | C6 or C5 | **8,000.00** | **355,000.00 21st November 2023** |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).
4. Interested bidders may obtain further information from **Deputy Project Director, Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email: dpd.np@csiap.lk),** and inspect the bidding documents free of cost at the same place on working days from **9.00 hrs to 14.00 hrs.**
5. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Further the successful bidder shall have valid registration Grade in Construction Industry Development Authority (CIDA) as mentioned in above Table under the specialty of **Buildings.** Bidders are free to bid for more than one Contract but selections, will be made accordingly to the financial and other capacity limits of the Contractors.
6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **item 4** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from
   ✓ **18th July 2023 to 8th August 2023 from 09:00 hrs.to 14:00 hrs. for Lot no 01 .**
7. Pre-bid meeting and subsequent Site Visit will be arranged on 25th July 2023 at 10.00 Hrs, at the place mentioned in **item 4** above. Prospective bidders are requested to inspect the sites with the assistance of the relevant officers at their own cost.
8. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any query.
9. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.
10. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate"' respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of Work and Contract No on top of left-hand corner of the envelope.
11. Completed Bids shall either be deposited in the Tender Box kept for this purpose or send under registered post address to **The Chairman, Regional Procurement Committee (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi** to reach
    ✓ on or before: **2.00 pm on 8th August 2023 Lot no 01 .**
12. Receiving of the Bids shall be closed
    ✓ at **2.00 pm on 2023-08-08 for Lot no 01.**

Late Bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province)**
**Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province),**
**Kovinthankadai Junction,**
**Wilson Road, Kilinochchi**

**Date - 2023-07-12**

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023-07-12

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | அடம்பன் நீர் வழங்கல் திட்டத்திற்கான வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/NRW/CONSTRUCTION VALVE CHAMBERS/ADAMPAN/2023/062 | 6,000 /- + VAT ** | ரூபா 65,000/- | சிவில் பொறியியல் நிர்மாணம் அல்லது நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.36 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele: 024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax: 024-2225088/ 024-2227341 | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 02 | பலாங்கொட நீர் வழங்கல் திட்டத்தின் BPTs திருத்தவேலைகள் மற்றும் பெட்டிகல ஸ்பிரிங் உள்ளீர்ப்பு படலையின் திருத்தவேலைகள் மற்றும் வேலியிடல், பக்க வடிகான் அமைத்தல்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(RAT)/CIVIL/CATCHMENT/ BAL/2023/25 | 4,000/- + VAT | ரூபா 43,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 2.81 மில்லியன் | பிஔநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 03 | வலகம்பாய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்ட அமைப்பு - பொதுவான அகழியிலுள்ள விநியோகத்தின் பிரதான மற்றும் பகுதி பரிமாற்றத்திற்காக DI/UPVC/HDPE குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் வால்வுகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: RSC-C/RWS/CIVIL/PL/KNPIWSP/ WALGAMPAYA/2023/149 | 12,500/+ VAT ** | ரூபா 136,250/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.62 மில்லியன் | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, மத்திய தெற்கு அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 081 2388086) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 04 | ஹந்தான நீர் வழங்கல் திட்டம் - ஹந்தான நீர் வழங்கல் உள்ளீர்ப்பிலுள்ள தோட்டச் சமூகத்திற்கான கழிவு நீர் முகாமைத்துவ முறைமை<br>ஒப்பந்த இல: RSC-C/CS/CIVIL/CPP/U-Y/ HANTHANA/2023/146 | 12,500/+ VAT ** | ரூபா 109,300/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.9 மில்லியன் | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, மத்திய தெற்கு அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 081 2388086) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 05 | அம்பன்கங்க நீர் வழங்கல் திட்டத்திலுள்ள வருமானமற்ற நீர் வழங்கலை குறைப்பதற்கான நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/CN/CIVIL/O&M/ AMBANGANGA/2023/47 | 12,500/+ VAT ** | ரூபா 110,000/- | சிவில் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.7 மில்லியன் | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 0812492311) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 06 | மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள இணைப்புகளை இடமாற்றம் செய்தல் மற்றும் HDPE,DI குழாய் வழிகளைப் பதித்தல் மூலம் பயன்பாடுகளை இடமாற்றுதல்.<br>ஒப்பந்த இல: RSC-C/CN/CIVIL/US/MATALE/2023/153 | 12,500/+ VAT ** | ரூபா 249,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 22 மில்லியன் | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 0812492311) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| | 2023-06-14ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. தெமோதர நீர் வழங்கல் திட்டம் - தெமோதர நீர்த்தேக்கத்தின் அகழ்வாராய்ச்சி செயற்பாடுகள்<br>ஒப்பந்த இல: RSC(UVA)/DGM(UVA)/REH/DEMODARA/2023/15R - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-08-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி (வரிகள் இன்றி) 45.7 மில்லியன் ரூபாவாக திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் முன்னைய விளம்பரத்தில் உள்ளவாறு மாறாமல் அவ்வாறே இருக்கும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 07 | எம்பிலிப்பிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Chlorine Gas Neutralization முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC(SAB)/RM(RAT)/REH/ M&E/EMB/2022/10 | 6,000 /- + VAT ** | ரூபா 130,000/- | Chlorine Gas Neutralization முறைமை மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 9.65 மில்லியன் | பிஔநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 08 | கம்பொல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள மவுன்ட் டெம்பல் பம்பி இல்லத்திற்கு 02 எண்ணிக்கையான Bore Hole type Submersible பம்பித் தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்.<br>ஒப்பந்த இல: RSC- C/M&E/S&I/PUMP/ENERGY/ GAMPOLA/2021/46 R | 6,000 /- + VAT ** | ரூபா 70,000/- | பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, கெட்டம்பே M&E பிரிவு, பிஔநி-C அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 0812388086) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 09 | தம்புள்ள நீர் வழங்கல் திட்டத்திலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Radar type Level Transmitters மற்றும் Remote Display Units வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: RSC-C/CN/NRW/M&E/ DAMBULLA/2023/138 | 4,000/+ VAT | ரூபா 50,000/- | Water Radar type Level Sensors வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>பேராதனை, கெட்டம்பே M&E பிரிவு, பிஔநி-C அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னேடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 0812388086) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 10 | கல்லேல்ல நீர் சுத்தகரிப்புப் பொறித்தொகுதிக்கு Progressive Cavity வலிந Sludge பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : RH/NC/DGM/SLU-PUMP/ GALTP/2022/052R | 12,500 /- + VAT ** | ரூபா 165,000/- | சேற்று நீர் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | - | பிஔநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 11 | நாஉல நீர் வழங்கல் திட்டத்தின் நாலந்த நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல: ජ්රාසේම-ම/මද/සේවා/ක්රිහන/නාඋල/2023/123 | 4,000/- + VAT | ரூபா 25,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 0812492311) | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 12 | கலகெதர பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/ CN/2022/221R2 | 2,000/- + VAT | ரூபா . 2,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26.07.2023 பி.ப. 2.00 மணி |
| 13 | மத்திய கிழக்கு அலுவலகத்திற்கு (பொறுப்பதிகாரி - வலப்பனை) க்றூ கெப்பை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CE/2022/265- R2 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஔ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26.'.07.'.2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## மக்கள் வங்கி
## மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களின் 31.03.2022 அடகு வைக்கப்பட்டுள்ள 11.08.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| **ஏல விற்பனை நிகழும் திகதி** | 12.08.2023 மற்றும் 13.08.2023 |
| **ஏல விற்பனை நிகழும் இடம்** | மக்கள் வங்கி இரத்தினபுரி நகரக் கிளை முதலாம் மாடி (குடுகலவத்தை) |
| **அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள்** | எம்பிலிபிட்டிய, பெல்மடுல்ல, உடவளவ, கொடகவெல, ரக்வான, கஹவத்த, பலாங்கொட, எஹலியகொட, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தொட்ட, குருவிட்ட, கிரிஎல்ல, நிவித்திகல, கலவான, பல்லேபத்த |
| **அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்** | படலங்கல கொலொன்ன, செவனகல, ஓபநாயக, பம்பஹின்ன, வெலிகெபொல, எஹலியகொட, இரத்தினபுரி புதிய நகரம், வேவெலவத்த, வெலிஓய, அயகம, கரவிட்ட |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை காரியாலயம்,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
**தொலைபேசி இல. 045-2223084/045-2230818**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு:** MUL/LND/02/ACQVI/89
**காணி அமைச்சின் இலக்கம்:** 4-3/2/2017/S/384

கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை சமுர்த்தி சமூக மத்திய வங்கியை அமைக்க எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தேசிக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 2022.12.06ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2309/07 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகைகளின் இரண்டாம் பிரிவைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : தெற்கு
மாவட்டம் : மாத்தறை
பிரதேச செயலகப் பிரிவு : முலட்டியன
கிராம உத்தியோகத்தர்
பிரிவு : கித்சிரிபுர
கிராமம் : ரதாவல
பட இலக்கம் : ஆ.கி.பட. 166
துண்டு இலக்கங்கள் : 776

**காணி கொள்வனவு உத்தியோகத்தர்**
**பிரதேச செயலாளர்,**
**முலட்டியன**

2023.07.06ம் திகதி
**முலட்டியன பிரதேச செயலகத்தில்**

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள் வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் குத்தகை விற்பனை 2023 – 2024

மேற்படி குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரல் எதிர்வரும் 2023.09.15 திகதி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். இவ் அறிவித்தல் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு 2338 வது வர்த்தமானியில் 2023.06.23ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| இல. 01 நுவரெலியா | மாநகர சபை நுவரெலியா இல. 06 பிரிவிற்குள் | 2023.09.15 | மு.ப. 10.30 | 5000.00 |

மேலதிக விபரங்களை நுவரெலியா பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**பிரதேச செயலகம்,**
**நுவரெலியா**
2023.07.07

**டி.ஏ.பி. தனன்சூரிய,**
**பிரதேச செயலாளர்,**
**நுவரெலியா.**

## இலங்கை முதலீட்டுச் சபை
## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக கேள்வி கோரல் அறிவித்தல் 2023 ஜுலை 08ம் திகதி சனி மற்றும் 2023 ஜுழைல 12ம் திகதி புதன் தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.

"SUPPLY, INSTALLATION & COMMISSIONING AND MAINTENANCE OF SURVEILIANCE CCTV SYSTEM TO HORANA EXPOR PROCESSING ZONE CONTRACT NO: BOI/TS/HEPZ/2023/05/08.09.007"

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதன் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்க 2023 ஜுலை 08ம் திகதி சனி மற்றும் 2023 ஜுலை 12ம் திகதி புதன் தினங்களில் (Daily News) பத்திரிகையின் சம்பந்தப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பாவனைக்குட்படுத்தாத பொருட்களை விற்பனை செய்தல் (ஒப்பந்த இலக்கம்: RDA/DM/DIS/2023/01)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பாவனைக்குட்படுத்தாத பொருட்கள் விடய இலக்கம் 168 மொரட்டுவ, அங்குலானை, புகையிரத நிலைய வீதி, இலக்கம் 50, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்தள வளாகத்தில் லொட் இலக்கம் 123ன் கீழ் விற்பனை செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகம் அவர்களால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பிரிவு | வகை | உற்பத்தி மற்றும் மாதிரி |
|---|---|---|
| விசேட பணிகளுக்கான இயந்திரங்கள் மற்றும் பாவனைக்குட்படுத்தாதவை | பாவனைக்குட்படுத்தாத கூருசர் பாகங்கள் | KYC PFJ (2 Units), Baxter Leeds (1 Units) |
| | லோ பெட் ட்ரேலர் | CIMC (1 Nos) |
| | பாவனைக்குட்படுத்தாதவை | பாவனையிலிருந்து நீக்கிய என்ஜின் வாகனங்களின் பாகங்கள் |
| வீதிகள் நிர்மாணிக்கும் பாரமான இயந்திர வகைகள் | வீல்ட் ட்ரெக்ட்டர் | Dong Feng DF180A (9 Nos) |
| | நியுமெட்டிக் டயர்ட் ரோலர்ஸ் | Lutong LPT1016 (2 Nos), Yutong 6510 (2 Nos), XCMG YL20C (10 Nos) |
| | ஸ்டெட்டிக் ரோட் ரோலர் | YTO 2Y810B (3 Nos), Lutong 2YJ 8×10 (2 Nos) |
| | ஸ்கிட் ஸ்ட்டியர் லோடர் | Luoyang LSL 210 (1 No) |
| | எஸ்போல்ட் பேவர் | Babber Green BG230 (1No) |
| இயந்திரங்கள் | பெக்கோ லோடர் | Fermec MF 750 (2 Nos), MF 750 4WD (1 No) |
| | மோட்டர் க்ரேடர் | Fiat Allis 65B (1 No) |
| | வீல்ட் லோடர் | Furukawa FL 170 (1 No), Kobelco LK 150Z (4Nos) /120Z(2Nos), Caterpillar C910 (1No) |
| உபகரணங்கள் | வெல்டிங் ஜெனரேட்டர் | Lincoln(2 Nos), Wellux(1 No), Xian (1No) |
| | மின்னியல் இயந்திரம் | Caterpillar 3408 (1No) |
| | கொங்றீட் கலவை இயந்திரம் | FCM(2Nos), PCM (2Nos), Esquire (3 Nos) |
| | லைட்டின் ப்ளான்ட் | Aries (2Nos) |
| | எயார் கம்ப்ரெஸர் | Intgersollrand (1No) |
| இலகுரக இயந்திரங்கள் | வைப்ரேட்டிங் ரோலர் (3 டொன் ) | XCMG (14 Nos), Bomag (2 Nos) |
| | வைப்ரேட்டிங் ரோலர் ( 1 டொன்) | XCMG (9 Nos), Dynapac (24 Nos), Vibromax (24Nos) |
| | ப்ளேட் கம்பெக்ட்டர் | Belle (19 Nos), Sakai (9Nos), |
| | ஹேண்ட் கார்ட் இமல்சன் ஸ்ப்ரெயர் | Dagang (5 Nos) |
| | டும்பர் | Benford (1No) |

ஆர்வமுள்ளவர்கள், மேற்குறிப்பிட்டுள்ள வீ.அ.அ வளாகத்தில் 2023 ஜுலை 10 முதல் 28 வரையில் மு.ப 10.00 பி.ப 3.00 வரையிலான காலப்பகுதியில் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பாவனைக்குட்படுத்தாத பொருட்களை பரிசீலனை செய்யலாம். இலக்கம் 50, புகையிரத நிலைய வீதி, அங்குலான, மொரட்டுவயிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்தளத்தில் அல்லது பணிப்பாளர் இயந்திரவியல், வீதி அபிவிருத்தி அதிகார சபை, 5ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர", இலக்கம் 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லையில் ரூபா 1000/- (வரி உள்ளடக்கப்பட்ட) செலுத்தி மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

முன்வைக்கப்படும் முழு கேள்வித்தொகையின் 5% க்கு குறையாத பிணைப் பாதுகாப்பு, ஆகக்குறைந்தது கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியிலிருந்து 90 நாட்கள் செல்லுபடியாகும் வங்கிப் பிணை (Bank Gurantee ) அல்லது வங்கி ஆணை (Bank Draft) ஊடாக கேள்விகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். செல்லுபடியாகும் கேள்விசார் ஆவணங்களின்றி (Bid bond) கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முத்திரையிடப்பட்ட கேள்விகள், பணிப்பாளர் நாயகம், வீ.அ.அ, பணிப்பாளர் இயந்திரவியல் பொறுப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, 5ஆம் மாடி, மகநெகும மஹமெதுர, இலக்கம் 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2023 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டியதோடு கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனே அவ்விடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்களது பிரதிநிதிகளும் கலந்துகொள்ள அனுமதியுண்டு.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**பணிப்பாளர் இயந்திரவியல் பொறுப்பாளர், 05ஆம் மாடி,**
**இலக்கம் 216, "மகநெகும மஹமெதுர"**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

## களனி பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**திகதி:** 2023 ஜுலை 12 ஆம் திகதியன்று
**கடன் மற்றும் தலைப்பு:** கடன் 3698/**3699 –** விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்.

**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு:** MOE/STHRD/KE/CRG/R2-7-E61: Procurement of Inductively Coupled Plasma Optical Emission Spectrometer (ICP-OES) at faculty of Computing and Technology, University of Kelaniya.

**விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி**: 2023 ஒகஸ்ட் 11 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு.

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து(ADB) 145 அஜடொ மில்லியனுக்கு சமமான நிதியை கல்வி அமைச்சின் கீழுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட அமுல் நடாத்தலின் (STHRD Project) ஆகுசெலவிற்காக பெற்றிருப்பதுடன், இந்த நிதியிடல் பெறுகையின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கோரலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வளநாடுகளின் விலைமனுதாரர்கள் பங்குபெற்றலாம்.
2. MOE/STHRD/KE/CRG/R2-6-E61: Procurement of Inductively Coupled Plasma Optical Emission Spectrometer (ICP-OES) at Faculty of Computing and Technology, University of Kelaniya என்பதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து களனி பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளரின் சார்பாக (''கொள்வனவுக்காரர்'') களனி பல்கலைக்கழக திணைக்கள பெறகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழகத்தின் கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீட ஆய்வுகூட கட்டிடத்திற்காகInductively Coupled Plasma Emission Spectrometer (ICP-OES) இன் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
3. பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரலானது ஆஅவ இன் பண்டங்களின் பெறுகை தனி-கட்ட–ஒரு-உறை நடைமுறைக்கமைவாக நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபெற்றலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பின்வரும் முக்கிய தகைமைகளைக் கொண்டுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர் மாத்திரமே பங்குபெற்றலாம்.

| அம்ச இல. | விளக்கம் | அலகுகளின் எண்ணிக்கை | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்டுள்ள வழங்கலின் நோக்கத்தைப் போன்ற தன்மை மற்றும் சிக்கல் தன்மையுடன் பின்வருவனவற்றில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு ஆகக்குறைந்த பெறுமதியுள்ள ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்களை கடந்த 5 ஆண்டுகளில் பிரதான வழங்குநராக சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இ.ரூபாவில்) | கடந்த மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட பின்வரும் ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு (இ.ரூபாவில்) | விலைமனு உத்தரவாதத் தொகை (இ.ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01 | Inductively coupled Plasma Optical Emission Spectrometer (ICP-OES) | ஒன்று | 15 மில்லியன் | 60 மில்லியன் | 350,000.00 |

5. மேலதிக தகவலை பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11 ஆம் மாடி (அறை இல. எல்11-5),**
**கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக பாதை, புழுகஹ சந்தி, கண்டி வீதி, களனி, இலங்கை.**
**தொலைபேசி: +94 (0) 11 2984879, 2984879, 071-9607455, 071-4492382**
**தொலைநகல்: +94 11 2984879**
**மின்னஞ்சல்: dpd-sthrd@kln.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆங்கிலத்தில் பெறுவதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் "MOE/STHRD/KE/CRG/R2-6-E-61 : Procurement of Inductively Coupled Plasma Optical Emission Spectrometer (ICP-OES) at Faculty of Computing and Technology, University of Kelaniya என்பதற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களை கேட்டு மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2023 ஒகஸ்ட் 10 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் ஆவணமானது/ஆவணங்கள் வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கான கடப்பாடானது ஏற்றுக் கொள்ளப்படாது.
7. களனி, கண்டி வீதி, புழுகஹ சந்தி, பல்கலைக்கழக பாதை, களனிப் பல்கலைக்கழகம், கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீட மாநாட்டு மண்டபத்தில் 2023 ஜுலை 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
8. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் 2023 ஒகஸ்ட் 11 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு உங்கள் விலைமனுவை ஒப்படைக்கவும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11 ஆம் மாடி (அறை இல. எல்11-5),**
**கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக பாதை, புழுகஹ சந்தி, கண்டி வீதி, களனி, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக உறைகளில் சேர்க்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு முத்திரை பதிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு உறைகளும் தனியொரு உறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE/CRG/R2-6-E61: Procurement of Inductively Coupled Plasma Optical Emission Spectrometer (ICP-OES) at Faculty of Computing and Technology, University of Kelaniya" என குறிப்பிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதியின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்**
**தளுகம, களனி,**
**இலங்கை.**

திகதி: 2023 ஜுலை 12 ஆம் திகதியன்று

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஜூலை 12 புதன்கிழமை

# ஜூனில் ஐ.சி.சியின் சிறந்த வீரராக ஹஸரங்க தெரிவு



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் ஜூன் மாதத்திற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக இலங்கை அணியின் முன்னணி சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜூன் மாதத்திற்கான ஐ.சி.சியின் சிறந்த வீரருக்காக வனிந்து ஹஸரங்க, அவுஸ்திரேலியாவின் டிராவிஷ் ஹெட் மற்றும் சிம்பாப்வே அணியின் சீன் வில்லியம்ஸ் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

இந்த மூவரில் அதிக வாக்குகளை பெற்றிருந்த வனிந்து ஹஸரங்க ஜூன் மாதத்திற்கான சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் விளையாடிய ஹசரங்க 22 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்ததுடன், ஜூன் மாதத்தில் மொத்தமாக 10 என்ற குறைந்த சராசரியில் 26 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். அதே நேரம் துடுப்பாட்டத்தில் 91 ஓட்டங்களையும் பெற்றிருந்துடன், இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறவும் உதவினார்.

இதேவேளை ஜூன் மாதத்திற்கான சிறந்த வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் சகலதுறை வீராங்கனை அஷ் கார்ட்னர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கால்பந்து தடையை நீக்க

# பிஃபா பிரதிநிதிகளுடன் அமைச்சர் பேச்சுவார்த்தை



இலங்கை கால்பந்து மீதான தடையை நீக்கும் முயற்சியாக சர்வதேச கால்பந்து சம்மேளன (பிஃபா) பிரதிநிதிகளுடன் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க சூம் தொழில்நுட்பம் ஊடாக நேற்று முன்தினம் (10) பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதில் சர்வதேச தடைக்கு மத்தியில் இலங்கை கால்பந்தின் தற்போதைய நிலை குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். தடையை அகற்றுவதற்கு இந்த பேச்சுவார்த்தை சாதகமாக இருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடையினால் இலங்கை கால்பந்து வீரர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் விரைவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கையால் பங்கேற்க முடியாத நிலைபற்றி அமைச்சர் இதன்போது பிஃபா பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையிலான உடன்படிக்கை அடிப்படையில் தடையை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி பிஃபா பிரதிநிதிகளிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். அமைச்சரின் வேண்டுகோளை அடுத்து இலங்கை கால்பந்து அணி உலகக் கிண்ண பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்குவது பற்றி ஆலோசிப்பதாக அந்த பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற விடயங்களை செயற்படுத்துவதற்கு விரைவான பொறிமுறை ஒன்றை அமைத்து இணக்கத்துடன் செயற்பட தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

அரசியல் தலையீட்டை காரணமாகக் கூறியே கடந்த ஜனவரியில் இலங்கை கால்பந்து சம்மேளனம் மீது பீஃபா தடை விதித்தது. இதனால் இலங்கை கால்பந்து அணிக்கு சர்வதேச போட்டிகளில் பற்கேற்க முடியாத நிலை நீடித்து வருகிறது.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கால்பந்து சம்பியன்சிப் போட்டியிலும் முதல் முறையாக இலங்கையால் பங்கேற்க முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# அறுகம்பே அரை மரதன் போட்டி ஜூலை 23 இல்



**பாலமுனை விசேட நிருபர்**

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும், அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் ஒன்றியத்தின் தலைவர் இஸட்.எம். ஹாஜித் தெரிவித்தார்.

இந்தப் போட்டி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் (10) அறுகம்பே றாம்ஸ் உல்லாச விடுதியில் இடம்பெற்றபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இப்போட்டி நிகழ்ச்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்கவுள்ளதுடன், அந்த பிரதேச மரதன் ஓட்ட வீரர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்களது பெயர்களை 0767016888 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது.

# உலமாக்கள் கிரிக்கெட்டில் நிந்தவூர் காஷிபி சம்பியன்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை அல்–அஸ்திகா விளையாட்டு கழகத்தின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசங்களை சார்ந்த உலமாக்கள் மற்றும் ஹாபிழ்களை கொண்ட கிரிக்கெட் அணிகள் பங்கு கொண்ட தொடரில் நிந்தவூர் காஷிபி அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கடந்த சனிக்கிழமை (08) பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் லீக் போட்டியாக நடைபெற்ற இந்த தொடரில் 13 அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப்போட்டியில் பாலமுனை மஹாஸினி உலமா அணியையே காஷிபி அணி வீழ்த்தியது.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் மற்றும் தொடர் ஆட்ட நாயகன் விருதினை காஷிபி அணியின் அஸாம் வென்றார்.

# எம்.எஸ்.கே. அணி சம்பியன்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கெக்கிராவ, திக்கந்தியாவ செவன் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியில் மடாட்டுகம எம்.எஸ்.கே. விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

திக்கந்தியாவ விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (09) நடைபெற்ற இறுதிப் போட்டியில் கலாவெவ பவர் போயிஸ் விளையாட்டு கழகத்தை எம்.எஸ்.கே. வீழ்த்தியது. தொடர் மற்றும் ஆட்ட நாயனாக மடாட்டுகம எம்.எஸ்.கே. அணியின் பயாஸ் தெரிவானார்.

# லங்கா டி10 லீக் தொடர் டிசம்பரில்

இலங்கையில் முதல் முறை நடைபெறவுள்ள லங்கா டி10 லீக் போட்டி எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் இந்தத் தொடரை ஆரம்பத்தில் ஜூன் மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டபோதும் டிசம்பர் மாதமே பொருத்தமாக இருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த லீக் தொடர் முன்னணி சர்வதேச நட்சத்திர வீரர்களை கவர்ந்திருப்பதாக குறிப்பிட்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் சபை, இதில் இலங்கையின் முன்னணி சர்வதேச வீரர்களும் பங்கேற்பதாக தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் 12 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

இதில் மொத்தம் ஆறு ஆண்கள் அணிகள் மற்றும் நான்கு பெண்கள் அணிகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு அணியிலும் ஆறு வெளிநாட்டு வீரர்களுடன் 16 வீரர்கள் இடம்பெறவுள்ளனர்.

# இலங்கை கிரிக்கெட் சபை அணி முதல் இன்னிங்ஸில் 196 ஓட்டம்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான பயிற்சி போட்டியில் இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணி முதல் இன்னிங்ஸில் 196 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று (11) ஆரம்பமான இந்த இரண்டு நாள் பயிற்சிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணிக்கு ஆரம்ப வீரர் ஓஷத பெர்னாண்டோ ஒறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாட மறுமுனை விக்கெட்டுகள் பறிபோயின. இதன்படி ஓஷத பெர்னாண்டோ 113 ஓட்டங்களை பெற்றபோதும் வேறு எந்த வீரரும் 21 ஓட்டங்களைக் கூட பெறவில்லை.

இறுதில் இலங்கை பதினொருவர் அணி 46.3 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. ஷஹீன் ஷா அப்ரிடி மற்றும் ஹசன் அலி இருவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 37 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஷான் மசூத் அதிக பட்சமாக 83 ஓட்டங்களை பெற்றார். லக்ஷித மானசிங்க 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

# 100 மில்லியனை தொட்டது 'த்ரீட்ஸ்': ட்விட்டர் வீழ்ச்சி



மெட்டா நிறுவனம் த்ரீட்ஸ் சமூகதளத்தை ஆரம்பித்தது தொடக்கம் ட்விட்டர் பயன்பாடு குறைந்திருப்பதோடு, த்ரீட்ஸ் பயனர்கள் எண்ணிக்கை 100 மில்லியனைத் தாண்டியுள்ளது.

கடந்த ஜுலை 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ட்விட்டர் போன்ற வசதிகளை வழங்கும் த்ரீட்ஸ் சமூகதளம், இன்ஸ்டாகிராம் செயலியுடன் இணைக்கப்பட்டிருப்பதால் பயனீட்டாளர்களை வேகமாக ஈர்த்து வருகிறது.

இன்ஸ்டாகிராம் செயலியை தினமும் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் பேர் பயன்படுத்துவதாக நம்பப்படுகிறது. மறுபுறம் ட்விட்டர் தளத்தை வழக்கமாக சுமார் 200 மில்லியன் பேர் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

எனினும் த்ரீட்ஸ் செயலி இன்னும் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தாத நிலை அது மேலும் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இந்நிலையில் த்ரீட்ஸ் அறிமுகப்படுத்தி இரு முழு நாட்களின் பின் ட்விட்டரின் பயன்பாடு 5 வீதம் வீழ்ச்சி கண்டிருப்பது இணைய பகுப்பாய்வு நிறுவனம் ஒன்றின் தரவு காட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ட்விட்டரின் பயன்பாடு 11 வீதம் அதிகரித்திருந்ததாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

த்ரீட்ஸின் அறிமுகம் தொடர்பில் ட்விட்டர் உரிமையாளர் இலொன் மஸ்க் ஏற்கனவே கவலையை வெளிட்டு வருகிறார். தொழில் இரகசியங்களையும் மதிநுட்பச் சொத்தையும் திருடியதற்காக மெட்டா நிறுவனம் மீது வழக்குத் தொடுக்கப்போவதாக மஸ்க் மிரட்டி வருகிறார்.

# அமைதி பேச்சில் பங்கேற்க சூடான் அரசாங்கம் மறுப்பு



சூடானில் சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் நீடித்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக நடத்தப்படும் பிராந்திய நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்க அந்நாட்டு அரசு மறுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை (10) ஆரம்பமான இந்த கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் கென்யா தமது எதிரிப் படைக்கு ஆதரவாக இருப்பதாக சூடான் அரசு குற்றம்சாட்டியுள்ளது.

சூடான் இராணுவம் மற்றும் துணைப் படை இடையில் கடந்த ஏப்ரல் நடுப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் இதுவரை சுமார் 3,0000 பேர் கொல்லப்பட்டதோடு சுமார் மூன்று மில்லியன் மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் எத்தியோப்பிய தலைநகரில் இடம்பெறும் கூட்டத்தில் பங்கேற்கவே சூடான் இராணுவத் தளபதி அப்துல் பத்தா அல் புஹாரி மற்றும் போட்டியாளரான துணைப் படை தலைவர் முஹமது ஹம்தான் டக்லோவுக்கு கிழக்கு ஆபிரிக்க பிராந்திய அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

## சர்வதேச செய்திகள்

# சுவீடன் நேட்டோவில் இணைய ஆதரவை வெளியிட்டது துருக்கி



நேட்டோ அமைப்பில் இணையும் சுவீடன் நாட்டின் விண்ணபத்தை ஆதரிப்பதற்கு துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான இணங்கியதாக அந்த இராணுவ கூட்டமைப்பின் தலைவர் ஜேன்ஸ் ஸ்டொல்டன்பர்க் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்புதலை உறுதிப்படுத்துவதற்கு துருக்கி பாராளுமன்றத்திற்கு சுவீடனின் விண்ணபத்தை அங்கீகாரத்திற்காக எர்துவான் முன்வைக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது சுவீடனுக்கு சிறந்த நாள் என்றும் தாம் மிக்க மகிழ்ச்சி அடைவதாகவும் சுவீடன் பிரதமர் உல்ப் கிரிஸ்டெர்சன் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக குர்திஷ் போராளிகளுக்கு இடம் அளிப்பதாக குற்றம்சாட்டி சுவீடனின் விண்ணப்பத்தை துருக்கி கடந்த பல மாதங்களாக தடுத்து வந்தது.

நேட்டோவின் 31 அங்கத்துவ நாடுகளில் ஒன்றாக இருப்பதால், அந்த அமைப்பில் புதிய நாடு ஒன்று இணைவதற்கு எதிராக துருக்கிக்கு வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பை அடுத்தே இதுவரையும் நடுநிலை வகித்து வந்த சுவீடன் மற்றும் அதன் கிழக்கு அண்டை நாடான பின்லாந்து நேட்டோவில் இணைய கடந்த ஆண்டு மே மாதம் விண்ணப்பித்தது.

இந்நிலையில் துருக்கியின் பாதுகாப்பு கவலையை கருத்தில் கொண்ட சுவீடன் நாட்டின் அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டுவந்து குர்திஷ் தொழிலாளர் கட்சிக்கு எதிரான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை விரிவுபடுத்தியதோடு துருக்கிக்கு ஆயுத ஏற்றுமதியையும் ஆரம்பித்தது.

சுவீடனின் நேட்டோ விண்ணப்பத்தை துருக்கிய மற்றும் ஹங்கேரி நாடுகள் மாத்திரமே எதிர்த்து வந்தன. இந்நிலையில் ஹங்கேரி தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும் என்று நேட்டோ தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நேட்டோவில் சுவீடனுக்கு ஆதரவு அளிப்பதை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் துருக்கியின் எதிர்பார்ப்பையும் எர்துவான் இணைத்து பேசியுள்ளார்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் உடன் நிராகரித்திருப்பதோடு இரண்டும் வெவ்வேறு விவகாரங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு துருக்கி 1987 ஆம் ஆண்டே விண்ணப்பித்தபோதும் எர்துகான் அந்நாட்டில் ஆட்சிக்கு வந்த பின் அந்த முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

இதனிடையே இரண்டு நாட்கள் கொண்ட நேட்டோ மாநாடு லித்துவேனிய தலைநகர் வில்னியஸில் நேற்று (11) ஆரம்பமானது.

இதில் உக்ரைனுக்கு அங்கத்துவம் வழங்குவது குறித்து பிரதானமாக கவனம் செலுத்தப்படவுள்ளது. எனினும் போர் நீடிக்கும் நிலையில் உக்ரைன் நேட்டோவில் இணைய முடியாது என்பதில் கூட்டணி நாடுகள் இணங்கியுள்ளன.

போர் முடிந்த பின்னரே உக்ரைன் நேட்டோவில் சேர்வது பற்றிப் பரிசீலிக்க முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

நேட்டோவில் உக்ரைன் சேர்ந்தால் அது ஏற்கனவே பாதியாக உடைந்து கிடக்கும் ஐரோப்பியப் பாதுகாப்புக் கட்டமைப்பில் மேலும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 12ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.